உ

சிவமயம்

கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்

அருளிச் செய்த

கந்த புராணம்

அசுர காண்டம்

மூலமும் உரையும்

பகுதி 6

இதனுள் அடங்கியவை

1. கிரவுஞ்சப் படலம்
2. விந்தம் பிலம்புகு படலம்
3. வில்வலன் வாதவி வதைப் படலம்
4. காவிரி நீங்கு படலம்
5. திருக்குற்ருலப் படலம்
6. இந்திரன் அருச்சனைப் படலம்

உரையாசிரியர் :

வை. நல்லையா

1 - 1 - 1974

24. கிரவுஞ்சப் படலம்

பொன்றிகழ் வரையின் நின்றுங் குறுமுனி புவியே ஆறுத்
தென்றிசைக் கேகு மெல்லைத் திறலரிக் கிளவல் வாழ்க்கை
வன்றிறல் மாய மூதூர் வந்தெய்த ஆண்டை வைகும்
அன்றிலம் பேர்பெற் றுள்ள அவுணன்அத் தன்மை கண்டான்.

பொன்னொளித் திகழ்கின்ற மேருமலையின் நின்றும் அகத்திய முனிவன் பூமியின் வழியாகத் தென் திசை நோக்கி வருங்கால்; திறமைமிக்க சிங்கமுகாசுரனுக்குத் தம்பியான தாரகாசுரன் வாழ்க்கை நடத்தும் வலிமையின் திறமிக்க மாயபுரி என்னும் முதிய நகரினை வந்துசேர; அந்த மாயபுரியில் இருக்கும் கிரவுஞ்சன் என்னும் பெயரினையுடைய அசுரன்; அவர் வரவின் தன்மையைக் கண்டான்; 1

வானுயர் உலகந் தன்னை வசுந்தரை யாக்கும் பாரை
ஏனைய ககன மாக்கும் எறிதிரைப் பரவை தன்னை
மேனிமிர் பிறங்க லாக்கும் வெற்பினைப் புணரி யாக்கும்
பானுவை மதிய மாக்கும் மதியினைப் பகலாகச் செய்யும்.

இந்த கிரவுஞ்சன் மாயம் வல்லவன் ஆகையால், அவன் வானத்தில் உயர்ந்த உலகை மண்ணுலகமாகச் செய்வான்; பூவுலகத்தை அதுவல்லாத ஏனைய தேவ உலகமாகச் செய்வான்; புரண்டு வீசுகின்ற திரையுடைய சமுத்திரத்தை வானத்து நிமிர்கின்ற மலையாக்குவான், மலையைச் சமுத்திரமாகச் செய்வான்; சூரியனைச் சந்திரனாக்குவான், சந்திரனை சூரியனாகச் செய்வான்; 2

அணுவினை மேரு வாக்கும் அன்னதோர் மேரு வெற்பை
நுணுகிய அணுவே யாக்கும் நொய்தெனப் புவனி தன்னைப்
புணரிய தாக்கும் நேமிப் புணரியைப் புவன மாக்கும்
இணருறு நேமித் தீயை எல்லைநீ ராகச் செய்யும்.

அணுவினை மேருமலையாகும்படி செய்வான்; அவ்வாறான மேருமலையை நுண்மையான அணுவாகச் செய்வான்; விரைவுடன் இப்பூமியை சமுத்திரமாக்குவான்; பூமியைச் சூழ்ந்த கடலை பூமியாக்குவான்; சுவாலை பொருந்திய வடவாமுகாக்கினியை எல்லை காண்பரிய நீராக்குவான். 3

கன்னலின் அயுதத் தொன்றிற் கடவுளர்க் கேனும் நீத்தோர்
என்னவர் தங்கட் கேனும் எனைப்பல மாயஞ் சூழ்ந்து
பன்னெடுங் காலஞ் செல்லப் படுத்திடும் என்னின் அம்மா
அன்னவன் வன்மை யாவும் ஆரறிந் துரைக்கற் பாலார்.

ஓர் நாழிகைப் பொழுதில் பதினாயிரத்தொரு பகுதியில் கடவுளர்க்கென்றாலும்; பற்றினை நீக்கிய எந்த துறவிகளுக்கேனும் இதுபோலே பல மாயங்களைச் செய்து பின்னர் அவர்களைக் கொன்றுவிடுவான் என்றால்; அம்மவோ அந்த கிரவுஞ்சனது வலிமைகள் யாவற்றையும் யார் அறிந்து சொல்லமுடியும்? 4

அத்தகு தகுவர் கோமன் அடற்கிர வுஞ்சன் என்போன்
மெய்த்தமிழ் முனிவன் செல்லும் வியநெறி விந்த மேபோல்
கொத்துயர் குவடு மல்கிக் குன்றுருக் கொண்டு தன்பால்
உய்த்திடு மாறு போககி உறுதலுங் குறியோன் கண்டான்.

இந்த தீய செயல்களை உடைய அசுரர் தலைவனான கொடுமை புரியும் கிர வுஞ்சன் என்னும் பெயருடையவன்; உண்மை விளைவுதரும் தமிழை வளர்த்த அகத் திய முனிவன் செல்லுகின்ற மேலான இவ்வழியில்; விந்தமலை எப்படி தோன்றி வளர்ந்துள்ளதோ அதே போன்று; தொகுதியாக உயர்ந்த சிகரங்கள் நிறையப்பெற்று மலைவடிவங்கொண்டு; தன்னிடத்து உள்ளே போவதற்கு அமைய ஒரு வழியும் காண் பித்து அங்கு நிற்றலும் அதனை அகத்திய முனிவர் கண்டார். 5

காண்டலும் வியந்து நன்றிக் கடிவரை நடுவ ணாக
ஈண்டிதோ ரத்தம் உண்டால் இவ்வழி நடத்தும் என்னா
ஆண்டத னிடையே போக அந்நெறி குரோச வெல்லை
மாண்டலும் இலதே யாக மற்றொரு சுரமுற் றன்றே

அகத்திய முனிவர் பிரான் மலையின் இயல்பைக் காண்டலும்; என்னை இது இப்படியும் இவ்வழியில் இது நிற்பது என வியந்து; சரி நல்லது இந்த சிறந்த மலை யின் நடுவே இதோ இவ்விடத்தில் ஓர் வழி உண்டு; இந்த வழியால் யாம் நடப் போமென்று அவ்விடத்து அவ்வழியால் போக அந்த வழியும் ஓர் குரோச எல்லை போக பின்னர் இல்லாமல் போய் வேறுமொரு வழி தோன்றியது. 6

அந்நெறி கண்டு தொன்னூல் அறைமுனி ஏகு லோடுஞ்
சென்னெறி மேலின் றாகத் திரும்பினன் செல்லுங் காலை
முன்னுள நெறியுங் காணான் முனிவரன் மயங்க ஓர்சார்
பின்னொரு வட்டை கண்டு பேதுற லோடும் போனான்.

அந்த வழியைக் கண்டு பழைய நூலான அகத்தியம் என்னும் நூலைச் அரு ளிச் செய்த அகத்திய முனிவர்; அவ்வழியாலும் செல்லுதலும் சிறிது தூரஞ்சென்ற பின் அப்பால் செல்லுதற்குரிய வழியில்லாதொழிய; திரும்பி வரும்போது முன் வந்த வழியையும் காணாது அகத்திய முனிவர் திகைத்தலும்; பின்னோர் சாராக ஓர் சிறு வழியைக் கண்டு அகத்திய முனிவன் அதனுள்ளாக பதைப்புடன் சென்றான். 7

ஆறது செல்லுமெல்லை அடலெரி கனைந்து சூழச்
சூறைகள் மயங்க மங்குல் துன்னென மாரி தூல
மாறகல் உருமுச் சிந்த வல்லிருட் படலை சுற்ற
வீறகல் மாயை சூழ்ந்தான் எறுழ்வலி அவுணர் கோமான்.

அந்த வழியால் செல்லும்போது கொடிய நெருப்பு சுவாலித்து சுற்றிவளைய வும்; சூறாவளிக் காற்று சுழற்றி அடித்து துயரப்படுத்தவும்; வானம் திடீரென மழை பொழியவும்; ஒப்பற்ற இடிகள் விழவும்; கொடிய இருளான படலம் சுற்றிமூடவும் முடிவில்லாத பல மாயங்களைச் செய்தான்; மிக்க வலிமைகொண்ட அசுர தலைவன் கிரவுஞ்சன் என்பவன். 8

மட்டுறு குறிய செம்மல் மற்றது நோக்கித் தீயோர்
பட்டிமை யொழுக்கீ தென்னாப் பயின்றிடு போத நீரால்
உட்டெளி பான்மை நாட ஊழ்திறந் தெரித லோடுங்
கட்டழல் என்னச் சீறிக் கரதலம் புடைத்து நக்கான்.

தேன்போலும் காண்பவர்க்கு இனிய சிறிய வடிவுகொண்ட அகத்திய முனிவர்; அத் தன்மையைப் பார்த்து ஓகோ! இது தீயவரின் கள்ளத்தனமான செயலாகும் என்று; தான் கற்றுக்கொண்ட ஞான நீர்மையால் உள்ளத்தே தெளிந்து நாடியறிய; இந்த கருமம் வரவேண்டிய தன் ஊழின் திறன்தெரிந்து கொள்ளலோடும் கொடிய நெருப்பைப் போலச் சீறி கைகள் இரண்டினையும் தட்டிச் சிரித்தார். 9

நன்றுநன் றவுணன் கொல்லாம் நமக்கிது புரியு நீரான்
இன்றிவன் வன்மை நீப்பன் யானென அவுண வெய்யோன்
குன்றுரு வதனிற் குற்றிக் குறுமுனி பாணித் தண்டால்
துன்றிரும் பூழை யாக்கிச் சூளிவை புகல லுற்றான்.

நல்லது நல்லது இந்த அசுரனோ நமக்கு இதைச் செய்ய வல்லான்; இன்று இந்த அசுரன் வலியை நீக்குவேன் யான் என்று; அசுரனை கொடியவனின் மலை வடிவில் தனது கையில் உள்ள தண்டால் குற்றி நெருங்கிய பெரிய துவாரங்களை உண்டாக்கி; பின்வரும் சாபங்களைச் சொல்லத் தொடங்குவார். 10

மாண்மதி பெறாத வெய்யோய் மற்றுநின் தொன்மை நீங்கி
நீண்மலை யாகி ஈண்டே நின்றுதி யவுணர்க் கெல்லாம்
ஏண்மிகும் இருக்கை யாகி இருந்தவத் தோர்க்கும் ஏனைச்
சேண்மலி கடவு ளோர்க்குந் தீத்தொழில் இழைத்தி பன்னாள்.

மாட்சிமையுடைய நற்புத்தியைப் பெறாத கொடியவனே! இப்போதே நீ இதுகாறும் உற்ற பழையநிலை நீங்கி நீண்ட மலையாக இவ்விடத்தே நின்று கொள்; இனி நீ அசைந்து திரிய முடியாது நின்று அசுரர்களுக்குகெல்லாம் நெடிதுகால இருப்பிடமாகி இருந்து; பெரிய தபோதனர்க்கும் ஏனைய வான உலகில் உள்ள தேவர்களுக்கும் இந்த தீய தொழிலைச் செய்வாயாக பலநாட்கள் வரை. 11

மாற்படு நமது பாணி வலிகெழு தண்டால் உன்றன்
பாற்படு புழைகள் யாவும் பற்பல மாயைக் கெல்லாம்
ஏற்புடை இருக்கை யாக எம்பிரான் உதவுஞ் செவ்வேள்
வேற்படை தன்னிற் பின்னாள் விளிதி விரைவின் என்றான்.

பெருமை மிகுந்த எனது வலியுடைய கைத் தண்டினால் உன்னிடத்தாக உண்டாக்கப்பெற்றிருக்கும் துவாரங்கள் யாவும் பல பல மாயங்களுக்கு எல்லாம் ஏற்புடையதான இருக்கையாக இருக்கும்; அப்பால் எம்பெருமான் திருக்குமாரராகி உலகினைச் சேமமுற வைக்கும்படியாக வந்தருளும் முருகப் பெருமானின் வேற்படையினால் பின்னாளில் அழிந்து போவாயாக; இது விரைவில் ஆகும் என சாபமிட்டார் அகத்திய முனிவர். 12

பழிதரும் இனைய சாபம் பகர்ந்துதன் சிகரந் தன்னில்
உழிதரு புனலை வாங்கி உளங்கொள்மந் திரத்தால் வீசி
அழிதர மாயை நீக்கி ஆண்டொரீஇ மீண்டு தென்பால்
வழியது செவ்வன் நாடி வண்டமிழ் முனிவன் போனான்.

தீங்கு பயக்கத்தக்க இந்த சாபத்தை செப்பி; தனது கமண்டலத்தூடு வைக்கப்பட்டிருந்த காவிரி என்னும் தீர்த்தத்தை கையில் எடுத்து; உள்ளத்தில் சிந்தித்த மந்திரத்தை செபித்து அங்கு கிரவுஞ்சனின் மாயை அழிந்துபோக வீசி அவ்விடத்தை விடுத்து தென்பாலில் உள்ள வழியினை இப்பொழுது செல்வனே ஆராய்ந்தறிந்து கொண்டு வண்மைமிக்க தமிழ் முனிவனான அகத்தியர் போயருளினார். 13

கிரவுஞ்சப் படலம் முற்றிற்று.

ஆகத் திருவித்தம் 1,222

25. விந்தம் பிலம்புகு படலம்

அன்னதோ ரவுணர் கோமான் அன்றுதொட் டசல மாகித்
துன்னெறி அவுணர் யாருந் துவன்றிய அரண மாகி
நென்னலின் முதனாள் காறு நின்றனன் அனையான் தன்னை
என்னையா ளுடைய நீயன் றிவாவரே அடுதற் பாலார்

அவ்வாறான அசுரர் தலைவன் கிரவுஞ்சன் என்போன் அன்று தொட்டு அசைந்து திரியாது நிலைபெற்றிருக்கும் மலையாகி தீய செயல்களைக்கொண்ட அசுரர் யாரும் நெருங்கி இருக்கின்ற கோட்டையாகி நேற்றுக்கு முந்திய நாள் வரையும் நல்லோர்க்குத் தீங்கு விளைப்விப்பனாகவே நின்றனன். அப்படியான கிரவுஞ்சனை என்னை முற்றிலும் ஆளுடைய நீயல்லாது வேறு யார் தான் சங்காரம் செய்யமுடியுமென வியாழ பகவான் எம் பன்னிருபுயத்து பகவானை நோக்கிச் சொல்லுவார். 1

பைந்தமிழ் முனிவன் வான்றோய் பனிவரை யதனை நீங்கிக்
கந்தரஞ் செறிபொற் கோட்டுக் கடவுளர் வரைச்சா ரெய்தி
அந்தம தடைந்தோர்க் கங்கண் அருளினால் தனது மூல
மந்திரம் உணர்த்தும் முக்கண் வானவன் காசி புக்கான்.

பசியதும் இனியதுமான தமிழை ஓதியருளிய அகத்திய முனிவர் வானத்தை முட்டிடும் குளிர்ச்சி வாய்ந்த பனிப்படலம் மூடிய இமயமலையை நீங்கி; அழகுசெறிந்த பொன்முடியுடைய தேவகிரியின் சாரலை அடைந்து; மரணமான முடிவை அங்கிருந்து அடைவோர்க்கெல்லாம் அருளினால் தனது மூலமந்திரத்தை உபதேசிக்கும் மூன்று கண்ணுடைய தேவாதிதேவன் சிவன் இருக்கும் காசியை அடைந்தார்.. 2

கங்கைசென் றொழுகுங் காசிக் கறைமிடற் றகில நாதன்
பங்கய அடிகள் தாழ்ந்து பரவல்செய் தாண்டு நீங்கித்
துங்கதை கொண்ட விந்தத் தொல்வரைக் கொருசா ரேகி
அங்கதன் நிலைமை நோக்கி அறிவன்ஒன் றியம்ப லுற்றான்.

கங்கையாறு சென்று சிறந்து ஓடுகின்ற காசியில்; நஞ்சைக் கண்டத்தில் தரித்த அகில உலகங்கட்கும் நாதனான சிவபிரானின் தாமரை போலும் திருவடிகளைத் தாழ்ந்து துதித்து வணங்கி; அவ்விடத்தை விடுத்து நீங்கி பெருமிதம்கொண்டு நின்ற விந்தம் என்னும் முதிய மலைக்கு ஒரு பக்கராகச்சென்று; அங்கு அந்த மலையின் நிலையை நோக்கி அகத்தியமுனிவன் ஒன்று சொல்லுகின்றான். 3

சேயுயர் நிவப்பிற் ருகிச் சேண்புகும் விந்த மென்னும்
மாயிருங் குவடு கேண்மோ மற்றியாம் பொதிய வெற்பில்
போயிருந் திடவே உன்னிப் போந்தனம் அதனுக் கின்னே
நீயொரு சிறிது செல்லும் நெறியளித் திடுதி யென்ருன்.

வானத்தில் உயர்வதில் உனக்கு ஒருவர் நிகரில்லாது மேலோங்கி வானம் புகுந்த விந்தமென்னும் மிகப்பெரிய மலையே கொஞ்சம் இதைக் கேட்பாயாக; நாம் இப்போது பொதிய மலையில் போயிருந்திடும்படியாகவே நினைந்து வந்தனம்; அங்கு நான் போவதற்காக நீ மறித்து நில்லாது கொஞ்ச வழிவிடுத்துத் தருவாயாக என்ருர். 4

எறிகதிர் மதியி னுக்கும் ஏகருந் திறத்தால் வான
நெறியினை யடைத்துத் தொல்லை நெடியமால் போன்று நின்றேன்
குறியநிற் கஞ்சி யாறு கொடுப்பனே எனது தோற்றம்
அறிகிலை மீண்டு போகென் றவ்வரை மொழிந்த தன்றே

பிரகாசித்து வரும் கிரணங்களையுடைய சந்திரனுக்கும் செல்ல முடியாத தன்மையால் யான் வானவழியையே இடைமறித்து அடைத்து; முன்வளர்ந்த நெடிய நாராயணக் கடவுள் போன்று நின்றேன். அப்படி இருப்ப குறுகிய வடிவுடையவனுன உனக்குப் பயந்து வழிகொடுப்பேனே; எனது தோற்றம் அறியாய் போலும்; திரும்பி நீ சென்றுவிடு என்று அந்த விந்தமலை சொல்லியது அன்றே. 5

கேட்டலும் அதனைச் சீற்றங் கிளர்ந்திட நகைத்து நாதன்
தாட்டுணை யுன்னித் தொன்ருட் சதமகன் வேண்ட ஆழி
மாட்டுறச் செறித்த கையை மலரயன் பதத்தின் காறும்
நீட்டினன் தவமே யன்றி நெடும்பொருள் பிறவு முண்டோ

விந்தமலையின் இந்த வார்த்தையைக் கேட்டதும் அகத்திய முனிவர் கோபம் தோன்றிடச் சிரித்து சிவபிரான் திருவடிகளை நினைந்து; முன்னுளில் இந்திரன்; சமுத்தில் ஒளித்த விருத்திராசுரனை காட்டித் தருப்படி வேண்ட அப்போது கடலை ஒருங்கே உழுந்தனவாக்கும்படி நீட்டிய அதே திருக்கையை; பிரமதேவரின் உலக வரையின் காறும் செல்லுமாறு நீட்டினுர். நீட்டலும் கை வளர்ந்தது ஆகையால் தவமேயன்றி மேலான பெரிய பொருள் வேறுண்டோ. 6

அற்புதம் அமரர் கொள்ள ஆற்றவுங் குறியோன் விந்த
வெற்பினை தும்பர் தன்னில் மீயுயர் குடங்கை சேர்த்தி
ஒற்புற வூன்ற வல்லே மற்றது புவிக்கட் டாழ்ந்து
சொற்பிலம் புகுந்து சேடன் தொன்னிலை அடைந்த தன்றே.

இது நோக்கித் தேவர் அற்புதம் கொள்ள; மிகவும் குறுகிய வடிவுடைய அகத்திய முனிவர் விந்தமலையின் உச்சியில் மிக உயர நீட்டிய தனது கையின்; உள்ளங் கையினை வைத்து வலிமையுடன் ஊன்றலும்; விரைவாக அந்த விந்தமலை பூமியின் உள்ளாகத் தாழ்ந்து சொல்லப்பெறும் பாதாளம் சென்று ஆதி சேடனுடைய உலகை அடைந்து கொண்டது. 7

அள்ளலை யடைகின் றோரில் அரம்புகும் அடுக்க லஞ்சி
வள்ளலை யருளிக் கேண்மோ மற்றுனை வழிப டாமல்
எள்ளலை யிழைத்து மேன்மை இழந்தனன் தமியன் குற்றம்
உள்ளலை எழுவ தெஞ்ஞான் றுரையெனக் கூறிற் றன்றே

சேற்றில் ஆழ்பவரைப்போன்று பாதாளம் புகுந்த மலையானது பயந்து வள்ளலே அகத்திய முனிவா! யான் சொல்வதை இரக்கமுடன் கேட்டருள்க! நீயே தெய்வமென்பதை நான் உணர்ந்து வழிபடாமல்; இகழ்ச்சியைப் புரிந்து எனது மேன்மை இழந்தனன். தமியேனுடைய குற்றத்தை எண்ணுதீர்; பொறுத்தருளி நான் மீண்டும் எழுவது என் நாளில் சொல்லியருள்க எனக் கூறியது. 8

அன்னதோர் பொழுது தன்னில் அலைகடல் செறித்த அங்கை
முன்னவன் விந்த வெற்பின் மொழியினை வினவி யான்போய்
இந்நெறி யிடையே மீளின் எழுதியால் நீயு மென்னு
நன்னகை யோடு சொற்றான் நாரதன் சூழ்ச்சிக் கொப்ப

அன்னதோர் பொழுதில் அலையினையுடைய கடலை உழந்தளவாக்கி அடக்கி வைத்திருந்த அழகிய திருக்கையினையுடைய முன்னவரான அகத்திய முனிவன்; விந்த மலையின் இந்த வார்த்தைக் கேட்டு விந்த மலையே கேள்! யான் போய் பின்னொரு முறை இந்த வழியாகத் திரும்பிவந்தால்; நீ மீண்டு எழுவாயாக என்று நல்ல புன் சிரிப்புடன் சொல்லியருளினர். நாரத முனிவனின் சூழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு. 9

வன்புலப் புவிக்குள் விந்தம் மறைதலும் அறிவின் நீராற்
புன்புலப் பகையை வென்றோன் கரத்தைமுன் போலச் செய்து
துன்புலப் புற்ற சிந்தைச் சுரர்கள்பூ மாரி தூர்ப்பத்
தென்புலப் பொதிய வெற்பிற் செல்வது சிந்தை செய்தான்.

கடினம் மிகுந்த பூமியின் உள்ளே விந்தமலை மறைதலும் தனது அறிவின் திறத்தால்; அற்ப சுகங்களைக் காட்டும் பஞ்ச புலங்களாகிய பகையை வெற்றிகொண்ட அகத்திய முனிவர் நீட்டிய கையினை வழமைபோல் அமையும்படி ஆக்கிக் கொண்டு; விந்தமலை ஒடுக்கப்பட்டபடியால் தமது துன்பங்கள் நீக்கப்பட்டு மகிழ்வான சிந்தையுடைய தேவர்கள்; பூமழை சொரிய தென் திசையிலே உள்ள பொதிய மலையில் செல்வதற்கு சிந்தை கொண்டார். 10

ஆயிடை விந்தம் பார்புக் கழுந்திட அகல்வா னத்துத்
தேயம்வெள் ளிடைய தாகத் தினகரன் முதலாந் தேவர்
பாய்சுடர் விளக்கம் யாண்டும் பரந்தன சிறையை நீங்கி
ஏயென அளக்கர் நீத்தம் எங்கணுஞ் செறியு மாபோல்.

அவ்விடத்து விந்தமலை பூமியின் உள்ளே ஆழ்ந்து அழுந்திடுதலும்; அகன்ற வானத்தில் உள்ள தேசங்கள் வெளியாதலோடும்; சூரியதேவன் முதலாகிய தேவர்களுடைய பரக்கின்ற ஒளிக்கிரணங்கள் எங்கும் பரந்தன; இது கட்டுப்பட்டிருந்த கடல் நீரானது தனது கட்டினை நீங்கி; கரையை உடைத்து எங்கணும் பரத்தல்போலாயது. 11

அதுபொழு தலரி யாதி அமரர்கள் அகத்தி யன்பாற்
கதுமென அடைந்து போற்றிக் கைதொழு தெந்தை செய்த
உதவியார் புரிவர் நின்னால் உம்பரா றெழுகப் பெற்றோம்
பொதியமேல் இனிநீ நண்ணி இருத்திஎம் பொருட்டா லென்றார்.

அதுபொழுதில் சூரியதேவன் முதலாகிய தேவர்கள் அகத்திய முனிவன் பாலாக விரைவுடன் வந்து; அவரை போற்றுதல் புரிந்து கைதொழுது எந்தைபெருமானே; தேவரீர் எமக்குச் செய்த உதவியை வேறுயார் செய்வார்கள்; உம்மால் வானவழிகளில் மீண்டும் செல்லக்கூடிய நிலையைப் பெற்றுக்கொண்டோம்; இனி மேலாகப் பொதியமலையில் சென்று சேர்ந்து எம் பொருட்டாக அங்கு இருப்பீராக என்றார்கள். 12

என்றலும் விழுமி தென்னா இசைவுகொண் டமரர் தம்மைச்
சென்றிட வானிற் றூண்டித் தெக்கிணந் தொடர்ந்து செல்லக்
குன்றமர் குடாது தேயங் குறுகும்வில் வலன்வா தாவி
அன்றுயிர் இழப்ப நின்றார் அகத்தியன் வரவு கண்டார்.

எனக் கூறலும் அது சிறந்தது என்று அதற்குச் சம்மதங்கொண்டு; முன் நின்ற தேவரை வான உலகுகள் மீதாகச் சென்று கடமைபுரிய ஏவிவிட்டு; தெற்கு நோக்கித் தொடர்ந்து அகத்திய முனிவன் செல்லலும்; மலைகள் நிரம்பிய மேற்கு நாட்டில் வாழ்கின்ற வில்லவன் வாதாவி என்னும் அசுரர்கள் அன்று; தமது உயிரை இழக்கும்படி நின்றார்கள்; அகத்திய முனிவர் வருதலைக் கண்டார்கள்; 13

விந்தம் பிலம்புகு படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1,235

---

26. வில்வலன் வாதாவி வதைப் படலம்

கண்டனர் இவனே போலுங் காய்சினத் தவுணர் ஆவி
கொண்டனன் வேலை முன்னங் குடித்துமிழ் கின்ற நீரான்
அண்டரை யருள்வா னங்கொல் அடைந்தனன் அவனுக் கின்னே
உண்டியை யுதவி ஆவி கொள்ளுதும் ஊனென் றென்றார்

கண்டவுடன் இவனே போலும் கொலைசெய்யும் கோபமுடைய அசுரர் பலர் உயிரை மாய்த்தவன்; சமுத்திர நீர் முழுமையும் முன்னங் குடித்து உமிழ்கின்ற தன்மையுடையான்; இவன் தேவர்களைப் பாதுகாக்க வேண்டிப் போலும் இங்கு அடைந்தனன்; அவனுக்கு இப்பொழுதே உணவினை வழமைபோலக் கொடுத்து அவன் உயிரை மாய்த்து உடலை உண்போம் என்றார்கள்; 1

என்றிவை புகன்ற பின்னர் இளவலவா தாவி யென்போன்
குன்றதன் புடையில் ஓர்சார் கொறியுருக் கொண்டு போந்து
மென்றழை புதலின் மேய வில்வலன் என்னு மேலோன்
ஒன்றிய புலத்தின் மிக்கோர் உருவுகொண் டுற்றான் அன்றே.

என்று இவைகளைப் பேசியபின் தம்பியான வாதாவி என்பவன்; மலையின் பக்கரில் ஒரு புறமாக ஆட்டு வடிவங்கொண்டு சென்று; மெல்லிய இலைகளை அவ்வி டத்தில் மேய்ந்து நிற்ப, வில்வலன் என்னும் மூத்தவன் ஒருமைப்பாடுடைய அறி வில் மேம்பட்டோரான முனிவர் உருவுகொண்டு அங்கு நின்றனன். 2

மீதுறு சடையும் நீறு விளங்கிய நுதலும் வேடங்
காதணி குழையின் சீருங் கண்டிகைக் கலனும் மேற்கொள்
பூதியுந் தண்டுங் கையும் புனைஉரி யுடையு மாக
மாதவ வேடந் தாங்கி முனிவனேர் வல்லை சென்றான்.

உச்சியின்மீது முடிந்துள்ள சடைமுடியும்; திருநீறு விளங்கிய நெற்றியுடன் விளங்குகின்ற வேடத்திற்கேற்ப; காதிலே அணியப்பெற்ற குண்டலங்களின் சிறப்பும் உருத்திராக்க மாலையான ஆபரணமும், மேனி முழுவதும் செறியப் பூசிய திருநீறும் யோகத் தண்டுகொண்ட கையும்; மர உரியான ஆடையுமான பெரிய தபோ வேடம் தாங்கிக்கொண்டு அகத்திய முனிவன் நேராக விரைவில் சென்றான். 3

மெய்தரு புறத்துக் காமர் வியனுருக் கொண்டு தன்னுட்
கைதவங் கொண்டு செங்கேழ்க் காஞ்சிரங் கனிபோல் மேய
மைதிகழ் மனத்தின் நேர்போய் வண்டமிழ் முனிவற் போற்றி
ஐதென வணங்கி முக்கால் அஞ்சலி செய்து சொல்வான்.

மேனியின் புறத்திலே அழகிய முனிவர் வடிவைக் கொண்டு; உள்ளத்து வஞ்சனையும் கொண்டு; சிவந்து அழகுடன் விளங்கும் காஞ்சிரைப் பழம்போல உள்ளே நஞ்சும் வெளியில் அழகும்கொண்டு; கறுவியங் கொண்ட மனத்துடன் அகத்திய முனிவன் நேராகச்சென்று; வண்மையுடைய தமிழ் தந்த அகத்திய முனிவரைப்போற்றி செய்து சீராக வணங்கி; மும்முறை அஞ்சலிசெய்து இதனைச் சொல்வான். முக்கால் என்பது முழுமனதுடன் இல்லாத எனும் பொருளும் தோன்றுகிறது. 4

அடிகள்நீர் போத இந்நாள் அருந்தவம் புரிந்தேன் இன்று
முடிவுற வந்தீர் யானும் முனிவர்தம் நிலைமை பெற்றேன்
கொடியனேன் இருக்கை ஈதால் குறுகுதிர் புனித மாகும்
படியென உரைத்துப் பின்னும் பணிந்தனன் பதங்கள் தம்மை.

முனிவர் பிரானே நீர் வரவேண்டி இந்நாள் வரையும் அரிய தவம்செய் திருந்தேன்; எனது தவமும் முடிவுற இன்று வந்தீர்; யானும் இன்று தான் முனிவர் நிலையை பெற்றுக்கொண்டேன். கொடியேனை எனது இருப்பிடம் ஈதாகும்; அங்கு நீர் வாரும் அது புனிதமாகும்படியாக என்றுகூறி பின்னரும் அகத்திய முனிவரின் பாதங்களைப் பணிந்தனன் முனிவடிவங்கொண்ட வில்வலன்; 5

பணிதலும் ஒருதன் கையிற் பரவையம் புனலை வாரி
மணிபடு பதுமம் போல வாய்க்கொளும் முனிவன் தீயோன்
துணிவினை யுணரா னாகித் துண்ணென உவகை தோன்ற
இணையறு தவத்தின் மிக்கோய் எழுதியென் றிதனைச் சொற்றான்.

வில்வலன் பாதங்களில் விழ்ந்து பணிதலும், அதுவேளை தனது ஒரு கையிலே எழு சமுத்திரங்களின் அழகிய நீரை வாரி ; முத்துள்ள தாமரைப் பூவினைப் போல வாயில் இட்டு உண்டவராகிய அகத்திய முனிவர் ; தீயவனான வில்வலன் உள்ளத்தே கொண்டதும்; முன்புள்ள முனிவர்க்குச் செய்துவந்த துரோகமான துணிவினை அறியாதவராய்த் திடீரென மகிழ்ச்சி தோன்ற; வில்வலனை நோக்கி. "இணையிலா தவத்தில் மேம்பட்டவனே எழுவாயாக" என்று கூறியபின் இதனைச் சொல்வார். 6

ஆறெதிர் எண்ம ராகும் ஆயிர முனிவர் தம்பால்
வேறுள தவத்தர் தம்பால் மிக்கநின் னியற்கை தன்னில்
கூறுசெய் அணுவின் கூறும் குணமில சரதம் ஈது
தேறுதி இருக்கை யேது செல்லுதும் வருக வென்றான்.

நாற்பத்தெண்ணாயிரம் என்னும் தொகையுடைய முனிவர்கள் தம்பாலோ அல்லது வேறுள தவத்தர்களிலோ; எவரிடத்தாகுதல் மேம்பட்ட உன்னிடத்திருக்கும் முனிவர்க்கு வேண்டிய குண இயல்புகளில் ஒரு அணுவின் அளவுதானும் இல்லை. இது உண்மையாகும் என திடங் கொள்வாய். நிற்ப, உனது இருப்பிடமேது அங்கே நாம் போவோம் வருவாயாக, என்றார். 7

என்றருள் முனியை நோக்கி ஈதென துறையுள் என்னச்
சென்றனன் முடிவான் வந்த தீயவன் அவற்கொண் டேகி
மன்றதன் இருக்கை யுற்று மரபுறு தவிசிற் சேர்த்திப்
பொன்றிகழ் அடிகட் கேற்ற பூசனை புரிந்து சொல்வான்.

என்ற அகத்திய முனிவனை வில்வலன் பார்த்து, ஈதாகும் எனது இருப்பிடம் என்று அவரை அழைத்துச்சென்று ; தனது வாழ்க்கை முடியும்படி வந்த தீயவனான வில்வலன்; தனது இருப்பிடத்தைச் சேர்ந்து; விதிமுறையாக அமைவுற்ற ஓர்சிம்மாசனத் தில் இருத்தி; அகத்தியமுனிவருடைய பொன் திகழும் பாதங்களுக்கு ஏற்ற பூசனைகளை விதிமுறை புரிந்தபின்னர் சொல்வான் 8

எந்தைநீ யானும் ஏனை என்குலத் தவரும் உய்ய
வந்தனை போலும் இந்நாள் மற்றென திருக்கை வைகி
வெந்திடு புற்கை யேனும் மிசைந்தனை எனக்குச் சேடந்
தந்தருள் புரிந்து போதி தவத்தரில் தலைவ என்றான்.

"எந்தை பிரானே நீர் யானும் ஏனைய எனது குலத்தவரும் உய்யும் காரணமாகப் போலும் இன்று வந்துள்ளீர்; ஆகவே எனது இந்த இருப்பிடத்தில் இன்று தங்கி ; நான் தருகின்ற வெந்திட்ட வெறும் சாதமேனும் உண்டு ; எனக்கு மிகுதியைத்தந்து ; உமது மிகுதியான பிரசாதத்தை உண்டு நான் அருள்பெறும்படி தந்தருளி; தவத்தரிற் தலைவனே பின்னால் போவீராக" என்றான். 6

சொல்வல முனிவர் மேலோன் சூர்முதன் மருகா யுள்ள
வில்வலன் மாற்றங் கேளா விழுமிது பரிவின் மிக்கோய்
ஒல்வதோர் உணவு நின்பால் உவந்தியாம் அருந்திப் பின்னர்ச்
செல்வது கடனு மென்று செப்பினன் தீமை தீர்ப்பான்.

தமிழ் என்ற சொற்களை வளப்புடையவாகச் சொல்ல வல்லவரும்; தனது சொல்லின் பயனால் உலகைச் சேமமுற வைப்பவருமான முனிவர்களில் மேம்பட்ட அகத்தியமுனிவர்; சூரபன்மனின் மருமகனாக உள்ள வில்வலனின் வார்த்தையைக் கேட்டு, "அது மிகவும் நன்று. அன்பில் மிகுந்தவனே! நீ தருகின்ற பொருத்தமிக்க உணவினை நான் அருந்தி பிற்பாடு செல்வது எனது கடமையாகும்" எனக் கூறினார் எத்தகைய தீமையையும் தீர்ப்பவர். 10

மேலவன் இதனைக் கூற வில்வலன் வணங்கி எந்தாய்
சிலமோ டடிசில் செய்வன் சிறிதுபோ திருத்தி யென்று
காலையங் கதனில் ஆண்டோர் கயப்புனல் படிந்து மூழ்கிச்
சாலவும் புனித னாகி அடுவதோர் சாலை புக்கான்.

மேலவரான அகத்தியமுனிவர் இதனைக் கூற வில்வலன் வணங்கி "எந்தை பிரானே! மிகவும் தூய்மையாக அமுது சமைப்பேன், சிறிது பொழுது அங்கு இருப்பீராக" என்று கூறி அக்காலையிலே சென்று அவ்விடத்திலுள்ள ஓர் குளநீரில் அழுந்தி மூழ்கி எழுந்து; மிகவும் புனிதனாகி சமையல் செய்யும் சாலையில் புகுந்தான். 11

அத்தலை நிலத்தை நீரால் ஆமயம் பூசி யாண்டுஞ்
சித்திரம் உறுத்தி யாவுந் தேடிவால் வளையின் சின்னம்
ஒத்ததண் டுலமா சேக ஒண்புன லிடையே இட்டு
முத்திறம் மண்ணி மற்றோர் முழுமணிக் குழிசி உய்த்தான்.

அந்தச் சாலையிலுள்ள நிலத்தை நீருடன் சேர்த்த பசுவின் சாணத்தினால் மெழுகி எல்விடத்திலும் கோலமிட்டு; சமையலுக்கு வேண்டிய பாத்திரம் முதல் பொருள் எல்லாம் தேடி; வெள்ளிய சங்கின் சிறிய துணிகளைப் போன்ற நல்ல அழகிய அரிசியை; அழுக்கு நீங்கும்படி நல்ல நீரில் இட்டு மூன்று முறை கழுவி; அந்த அரிசியை வேறொரு பெரிய குழிந்த வடிவுடைய மணியான பாத்திரத்தில் இட்டான். 12

தாக்குறு திறலின் வெய்ய தழல்பொதி கருவி யான
ஆக்கிய செய்த தொன்றில் அழலினை அதனுள் மூட்டித்
தேக்ககில் ஆர மாட்டிச் செருணத் தசும்ப ரொன்றில்
வாக்கிய வுலைப்பெய் தேற்றி மரபில்வால் அரியுள் விட்டான்.

வேகமுடன் உராய்ஞ்சுகின்ற மையினால் நெருப்புத் தோன்றும் கொடிய நெருப் பிருக்கும் கருவியான தீக்கடைக் கோலினின்றும் உராஞ்சிப் பெறப்பட்ட நெருப்பை (தீக்கடைக்கோலின் நின்று பெறுகின்ற நெருப்பே மேலானது என விதிக்கப்பட்டது ஆகையால்) சமையல் செய்வதற்காக அமைக்கப்பட்ட ஓர் அடுப்பில் மூட்டி; தேக்கும் அகிலும் சந்தனமுமாகிய விறகைச் செருகி மாட்டி எரியச் செய்து ஓர் செப்புப் பாத்திரத்தில் செய்யப்பெற்ற உலையை அந்த அடுப்பில் வைத்து; கழுவிய வெள்ளை அரிசியை அதனுள் போட்டான் 13

பதனறிந் துண்டி யாக்கிப் பாலுற வைத்துப் பின்னர்
முதிரையின் அடிசி லட்டு முன்னுறு தீம்பால் கன்னல்
விதமிகும் உணுக்கள் யாவும் மேவுற அமைத்துக் கொண்டு
புதுமணங் கமழுந் தெய்வப் புனிதமாங் கறியுஞ் செய்தான்.

வேகுற்ற பதம் அறிந்து அதனை இறக்கி பக்கராக வைத்து ; பின்னர் சிறு தானியங் கலந்த அன்னத்தைச் சமைத்து ; அதனோடு பின்னரும் இனிய பாலினும் சர்க்கரையிலும் விதவிதமாகச் செய்யப்பெறும் இனிப்புடைய அமுது வகைகள் யாவும் பொருந்துற அமைத்துக் கொண்டு ; புதுவாகிய வாசனை விசுகின்ற தெய்வத் தன்மைக்கேற்ற தூயகறி வகைகளையும் செய்தான். 14

ஆற்றலால் மேடம் போலாய் ஆரிடர் உயிரை யெல்லாம்
மாற்றுவான் அமைந்து நின்ற இளவலை வலிதிற் பற்றிக்
கூற்றமே போல மேவும் முனிவன்முற் கொணர்ந்து கையில்
ஏற்றகூர்ங் குயத்தாற் காதி இருதுணி யாக்கி னனே.

பின்னர் தனது வலியால் ஆட்டுக் கடாவின் வடிவாகி ; முனிவர் உயிரையெல்லாம் அழிக்கும்படி நினைவுகொண்டு நின்ற தம்பியை ; வலியால் பிடித்து அவனுக்கு இயமன் போன்று வந்திருக்கும் அகத்தியமுனிவன் முன்னாகக் கொணர்ந்து; கையில் பொருந்திய கூரிய வாளால் இரண்டு துண்டாக வெட்டினான். 15

அணிப்படு போர்வை நீக்கி அங்கமும் அகற்றி வாளால்
துணிப்பன துணித்தும் ஈர்ந்தும் சுவைத்திடும் உறுப்பூன் எல்லாங்
குணிப்பொடு குட்ட மிட்டுக் குழிசிகள் பலவிற் சேர்த்தி
மணிப்புனல் கொண்டு முக்கால் மரபினால் மண்ணல் செய்து.

வெட்டப்பட்ட ஆட்டின் அழகுடன் அமைந்த புறத்தோலை நீக்கி, எலும்புகளையும் விலக்கி, துணிக்கவேண்டியதைத் துணித்தும்; அரியவேண்டியதை ஈர்த்தெடுத்தும் சுவையான உறுப்புக்களின் ஊன் இறைச்சிகள் யாவற்றையும் அவதானத்துடன் குடைந்து எடுத்துக்கொண்டு; பல சிறு சிறு பாத்திரங்களில் வைத்து; (இவைகள் பொரிப்பதற்கு, ஆக்குவதற்கு வேறு வேறு வேறாக உகந்த இறைச்சிகள் ஆதலினால் அவை எவை என அசுரனானபடியால் நன்கு முன்னர் உணர்ந்துகொண்டவனானமையின் குணிப்பொடு குட்டமிட்டுக் குழிசிகள் பலவில் சேர்த்தி என்றார்) இவைகளையும் மூன்று முறை முத்துப்போல் தண்ணீரால் முறையாகக் கழுவினான். 16

உரைத்தவக் கறிக்கு வேண்டும் உவர்முதல் அமைந்த நல்கி
வருத்துறு கனன்மேற் சேர்த்தி வாலிதிற் புழுக்கல் செய்தே
அரைத்திடு கறியின் நுண்தூள் ஆதிதூய் இழுது பெய்து
பொரிப்பன பொரித்திட்டாவி போந்திடா வண்ணம் போற்றி.

சொல்லியபடி இந்தக் கறிக்கு வேண்டப்பட்ட உப்பு முதலாக அமைந்த பொருள்களை இட்டு; வேகின்ற நெருப்பின் மேலாக வைத்து நன்றாக வெந்துகொள்ளும்படி சமைத்துக்கொண்டு; அம்மியில் வைத்து அரைக்கப்பட்ட மிளகு தூள் ஆதியான கூட்டுகளைத் தூவி நெய்யை ஊற்றி பொரிக்கவேண்டியதைப் பொரித்து அவற்றின் மணம் வெளிப்போகாதபடி மூடி வைத்தான். 17

கறியினுண் பொடியும் ஏலைக் கந்தமார் துகளும் அந்நாள்
வறையல்போ குற்ற தூய வாலரிப் பொடியும் நீவி
உறைகெழு நுப்பும் வாக்கி யொழுகுபல் காயங் கூட்டித்
திறனொடும் அளாவி யாங்கோர் சிற்சில பாகு செய்து.

நுண்மையான மிளகுத் தூளையும் வேறு வாசனையுடைய இலைகளின் பொடிகளான வைகளையும் ; அன்று இக்கறிக்கென வறுத்தெடுக்கப்பட்ட வெள்ளை அரிசி மாவையும் தடவி; உறைந்த கட்டியான நெய்யையும் வார்த்து நீர்ப்பதமாக மஞ்சள் முதலியவற் றைச் சேர்த்து அரைத்தெடுத்த காயங்களையும் கூட்டி ; வலியால் பல தடவை துளாவி அதிலே சில சில விதமான பாகங்களையும் செய்து. 18

பின்னரும் பலகால் வேண்டும் பெற்றியிற் கரித்துச் செம்மி
முன்னுற அளிக்க நின்ற முதிரையின் புழுக்கல் அட்டுச்
செந்நல நீடும் கன்னல் தீம்புளிங் கறியுஞ் செய்யா
அன்னதோர் தொடக்கம் யாவும் அருளினன் அருளி லாதான்,

அதன் பின்னரும் பலமுறையும் வேண்டியபடியாக தாளித்து அவற்றையும் மூடி வைத்து, முதலில் படைக்கவேண்டிய பருப்புக் கறியையுஞ் சமைத்து; செப்பமான சுவையமைந்த இனிப்புக் கறிகளையும்; இனிய புளிக்கறிகளையும் சமைத்து; இக்கறி முத லாக விருந்திற்கு வேண்டிய பொருள் யாவற்றையும் செய்தான்; இரக்கம் இலாத வில்வலன். 19

ஆசினி வருக்கை யாதி அளவையில் கனிகள் கீறித்
தேசமர் கன்னல் தீந்தேன் சேர்தரச் சிவணி யேனை
வாசமும் மலரும் இட்டு வரம்பில அமைத்துப் புத்தேள்
பூசனைக் குரிய அன்பாற் பொருக்கெனக் குவவு செய்தான்.

ஈரப்பலா, பலா முதலிய மரங்களின் அளவிலாத பழங்களைக் கீறி; எடுத்து அவைகளுடன் நல்ல நிறமுடைய சர்க்கரையையும் இனிய தேனையும் நன்கு சேரும் வண்ணம் கலந்து; ஏனைய சுகந்தப் பொருளையும் பூக்களையும் வேறுவேறாக அளவிறந் தன அமைத்து; கடவுட் பூசைக்கு ஏற்றவகையால் விரைவுடன் ஒழுங்காக அழகுடன் விளங்க குவித்து நிரப்பினான். 20

குய்வகை யுயிர்ப்பின் மாந்திக் குவலயம் விரும்பு கின்ற
ஐவகை உணவும் ஆறு சுவைப்பட அளித்துப் பின்னும்
எவ்வகை யனவுந் தானே இமைப்பினில் அமைத்து வல்லே
கவ்வையி னோடுஞ் சென்று கடமுனி கழல்மேல் தாழ்ந்தான்.

சமையல் செய்த உணவுப் பொருள்களின் வாசனையை தங்களது சுவாசத்தால் முகர்ந்து; இப்பூமியிலுள்ளார் விரும்புகின்ற ; உண்ணுவன, தின்பன, நக்குவன, பருகு வன, உறிஞ்சுவன ஆகிய ஐந்து வகையான உணவுகளையும்; கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு, கைப்பு என்னும் ஆறு சுவையுடன் பொருந்த சமைத்து பினனர் அமுது செய்வதற்கு வேண்டிய எவ்வகையான பொருளையும் அமைத்துக் கொண்டு விரைவுடனுகச் சென்று: அகத்திய முனிவர் திருவடிகளில் தாழ்ந்து வணங் கினன் வில்வலன். 21

எந்தைநீ இன்ன காலை இரும்பசி யுடற்ற ஆற்ற
நொந்தனை போலும் மேனி நுணங்கினை தமியேன் ஈண்டுத்
தந்தனன் உணவி யாவுந் தளர்வற நுகரு மாறு
வந்தருள் என்று வேண்ட மற்றதற் கிசைந்து போனான்.

எந்தைபிரானே, தேவரீர் இவ்வளவு நேரமும் பெரும் பசி வருத்த மிகவும் நொந்துளீர் போலும். மேனியும் வாடியுள்ளீர்; தமியேன் உமக்கு வேணடிய உணவு எல்லாம் சமைத்துள்ளேன். உமது தளர்வு நீங்கிக்கொள்ளுமாறு உணவருந்த வந்தருளும் என்ன வேண்டலும்; அகத்திய முனிவர் அதற்கு இசைவுகொண்டு சென்றார். 22

அட்டிடு சாலை மாட்டே அகத்தியற் கொடுபோய் ஆங்கண்
இட்டதோர் இருக்கை தன்னில் இருத்தியே முகமன் கூறி
மட்டுறு தூநீர் கந்த மலர்புகை தீபங்கொண்டு
பட்டிமை நெறியிற் பூசை புரிந்துபின் பதநேர் குற்றுன்.

சமையல் செய்கினற அந்தச் சாலையின் . இடத்தாக அகத்தியமுனிவரைக் கொண்டு சென்று; அங்கே இடப்பட்ட ஓர் ஆசனத்தில் இருத்தி முகமன் பல கூறி வாசனை பொருந்திய சுத்தமான நீர். சந்தனம், பூ, தூபம் தீபம் இவற்றை எடுத்துக் கொண்டு; அன்பிலாது வஞ்சனையினுல் வெளிப்பார்வைக்காக பூசை புரிந்து; பின்னராக அன்னத்தைப் படைக்கத் தொடங்கினுன். 23

வேறு

தெள்ளுஞ் சுடர்ப்பொன் இயல்கின்ற தட்டை திருமுன்னர் வைத்து நிரையா
வள்ளங்கள் வைத்து மிகுநாரம் உய்த்து மரபில் திருத்தி மறையோன்
உள்ளங் குளிர்ப்ப அமுதன்ன உண்டி உறுபேதம் யாவும் உதவா
வெள்ளம் படைத்த நறுநெய்ய தன்கண் விட்டான் தன் ருவி விடுவான்.

தெளிவான ஒளிபொருந்திய பொன்னுற் செய்யப்பட்ட தட்டத்தை அகத்திய முனிவர் திருமுன்னிலையில் வைத்து; வரிசையாக கிண்ணங்களை வைத்து; மிகுந்த நீரை விட்டு முறைப்படி கழுவி; அகத்திய முனிவரது உள்ளங் குளிரும்படி அமுதம்போலும் அன்னவகைகள் எல்லாவற்றையும் படைத்து ; அதன்மேலாக வெள்ளம் ஊற்றுவது போல் வாசனை கலந்த நெய்யை ஊற்றினுன் ; தனது உயிரை விரைவில் விடப் போகும் வில்வலன். 24

முறைவைப்பு நாடி முதன்மைக்கண் மேவு முதிரைப் புழுக்கல் மறியின்
கறிவர்க்கம் ஏனை யவைசுற்றின் மேய கவினுற்ற கிண்ணமிசையே
உறவிட்டு நீட மதுரித்த யாவும் உடனுய்த் தொழிந்த வளஅஞ்
செறிவித்து மேலை முனிகைக்குள் நீடு சிரகத்தின் நீருதவினுன்.

கறிவர்க்கம் படைக்கவேண்டிய முறையை உணர்ந்து முதலில் படைக்க வேண்டியதும் சத்துள்ளதுமான பருப்புக் கறியும், ஆட்டு இறைச்சியின் கறிவர்க்கமும், ஏன்வைக்கப்பட்டிருந்த அழகாய கிண்ணங்களில் பொருந்தும்படி இட்டு; நெடுகவும் இனிமை தருவனவாய பொருள்கள் எல்லாவற்றையும் கூடவே படைத்து ; மற்றைய பொருள்களையும் அங்கு வைத்து; மேலான அகத்தியமுனிவர் கையிடத்து நீண்ட கமண்டலத்தில் உள்ள நீரை வார்த்தான். 25

பெருநீர் அடங்கு சிறுகையி னுடு பெறவுய்த்த தோயம் அதனை
இருபான்மை உண்டி யதுசூழும் வண்ண மிசையோடு சுற்றி யதுதான்
ஒருகால் நுகர்ந்து பலகாலி னுக்கும் உதவிப்பின் உள்ளபடியும்
அருகாது செய்து மிகவே விரும்பி அயில்வான் தவங்கள் பயில்வான்.

பெரிய கடலை அடக்கிய தமது சிறு கையினோடு பெறும்படி வில்வலன் கமண்டலத்தால் வார்த்த நீரை அகத்திய முனிவர், முன்பாக படைத்த உணவைச் சூழும்படி மந்திர செபத்துடன் இருமுறை சுற்றி அந்நீரைப் பின்னொருமுறை ஆசமனஞ் செய்து .ஐந்து வாயுக்களுக்கும் ஆகுதி செய்து அதன்பின் உள்ள காரியங்களையும் குறைவின்றிச் செய்து மிக் விருப்பத்துடன் உணவை உண்டார், 27

அடுகின்ற உண்டி கறிவர்க்க மேனை அவையன்பி லாத அசுரன்
இடுகின்ற தேது முடிவெய்து காறும் இனிதுண்டு பின்றை முனிவன்
கடிகொண்ட நாரம் அனையன் கொணர்ந்து கரமுய்ப்ப நுங்கி யெழுவான்
பொடிகொண்டு தன்கை மலர்நீவி மிக்க புனல்கொண்டு மண்ணல் புரியா.

சமையல் செய்கின்ற உணவும் கறிவர்க்கமும் ஏனைய பொருள்களையும் அன்பிலாத அசுரன் இடுகின்ற எதனையும் உண்டுவிட்ட பின்னர்; வாசனைகொண்ட நீரினை வில்வலன் கொண்டுவந்து கையில் கொடுப்ப; அந்நீரை உண்டு எழுகின்ற அகத்திய முனிவர்; தூய்மை செய்யும் பொடி கொண்டு தனது தாமரை மலர்போலும் கையைத் தேய்த்து; மிகுந்த நீரைக் கொண்டு தனது கையினைக் கழுவி. 27

மைக்காரின் மெய்யன் அருள்கின்ற நாரம் வாய்க்கொண்டுமிழ்ந்து பலகால்
முக்காலின் நுங்கி வாய்பூ சறுத்து முறைநாடி அங்க மெவையும்
மிக்காறு மூறு புரியாவ தன்றி வேறுள்ள செய்கை பலவும்
அக்காலை யங்கொர் புடையுற் றியற்றி அவண் விற் றிருக்கும் அளவில்

கருமேகம் போன்று கருமை உடைய மேனி கொண்ட வில்வலன் கொடுக்கின்ற நீரினை பலகாலும் வாயில் கொண்டு கொப்பளித்து; மூன்று முறை நீரை உட்கொண்டு வாயை ஈரம் நீங்கத் துடைத்து; விதிமுறைகளைச் சிந்தித்து தொடவேண்டிய உறுப்புக்கள் எல்லாவற்றையும் தொட்டு; அது மாத்திரமல்லாமல் வேறுள செய்கை எல்லாம் அக்காலையில் அங்கு ஓர் பக்கராக இருந்து செய்து; பின்னர் அவ்விடத்து அகத்தியமுனிவர் வீற்றிருக்கும் காலத்து, 28

வேதா அளித்த வரமுன்னி யேவில் வலனென்னும் வெய்ய அசுரன்
போதா விருந்த முனியாவி கோடல் பொருளாக நெஞ்சின் நினையா
வாதாவி மைந்த இளையாய் விரைந்து வருகென்று கூற முனிவன்
றீதார் வயிற்றின் இடையே எழுந்து திறல்மேட மாகி மொழிவான்.

பிரமதேவர் கொடுத்துள்ள வரத்தை வில்வலன் என்னும் கொடிய அசுரன் நினைந்துகொண்டு; அங்கு வந்திருந்த அகத்தியமுனிவரின் உயிரைக் கவருதலையே பொருளென்று மனத்தில் நினைந்து; எனது தம்பி வாதாவி என்னும் குமரனே! விரைவுடன் வருவாயாக என்று கூற; அதுபோதுவாதாவி தனக்குதீமை பொருந்திய அகத்தியரது வயிற்றின் இடையாக வலிமையுடைய ஆடாக எழுந்துநின்று சொல்லுவான். 29

எண்ணுமை லேமுன்பு கடலுண்ட தேபோல என துானும் உண்ட கொடியோன்
உண்ணும் உயிர்கொண்டு வலிகொண்டு குறிதான உதரங் கிழித்து வருவான்
அண்ணவில் வலனேயெ னக்கூறியே தம்பி அரிபோல் முழங்கி யிடலும்
மண்ணுடர் புகழ்கும்ப முனிநீயர் செய்திட்ட மாயந் தெரிந்து வெகுள்வான்.

தீங்கு நேருமென்று ஆலோசனை செய்யாமல் முன்னுளில் கடல் உண்டதே போல; எனது தசையையும் உண்ட கொடிய அகத்தியமுனிவரின் உயிரையும் மாய்த்து

டலைக் கிழித்துக்கொண்டு வருவேன்; அண்ணு வில்வலனே பார். எனக் கூறியே தம்பி வாதாவி அகத்தியமுனிவர் வயிற்றிலிருந்து முழக்கஞ் செய்திடலும்; பூவுலகெங்கும் உள்ளார்புகழ்கின்ற அகத்தியமுனிவர்; தீயவரான இவர்கள் செய்திட்ட மாயத்தினை இப்போது தெரிந்து கோபங் கொள்வார். 30

ஊன்கொண்ட கறியாகி நுகர்வுற்ற வாதாவி உயிர்போகி யுண்ட இயல்பே
தான்கொண் டு முடிகென்றுசடரத்தை யொருகாலே தழிஇ் வல்ல முனிதடவலுங்
கான் கொண் ட எரிமண் டு சிறுபுன் புதற்போன்று கடியோ னுமுடி வாகவே
வான்கொண் டலெனஅங்கண் முன்னின்ற வன்தம்பிமாய்வுற்றதுன்னிவருவான்

கோபங்கொண்ட அகத்தியமுனிவர்; இறைச்சிக் கறியாக சமைக்கப்பட்டு இப்பொழுது உண்ணப்பட்ட வாதாவி என்பவன்; எப்படி வெட்டியதும் உயிர் போய் மாண்டானே; அதே இயல்பாக எனது வயுற்றுள் இறந்தொழிவனாக என்று தமது திருவயிற்றை ஒருகால் அகத்தியமுனிவர் தடவுதலும், காட்டினில் பற்றிக்கொண்ட பெருநெருப்பில் அகப்பட்ட சிறு புல்லுச் செடி போன்று; கொடிய வாதாவியும் எரிந்து சாம்பராகி இறந்துபோதலும்; வானத்தில் உள்ள மேகத்தைப் போன்று முன்நின்ற வில்வலன்; தனது தம்பி வாதாவி மாண்டுபோனதை உணர்ந்துகொண்டு வருவான். 31

மெய்க்கொண்ட தொன்னுள் உருக்கொண்டு முனிதன்னை வெகுளுற்றுர் தண்ட மதனைக்
கைக்கொண்டு கொலையுன்னி வருபேழ்தில் முனிவன் கரத்தில் தருப்பை ஒன்றை
மைக்கண்டர் படையாக நினைகுற்று விடவில் வலன்றுனு மடிவெய்தலும்
அக்கண்ட கக்கள்வர் உறையுற்ற இடம்நீங்கி அப்பால் அகன்றனனரோ.

தனது உண்மையான அசுரத்தன்மையுடைய பழைய உருவை இப்போது எடுத்துக்கொண்டு; அகத்தியமுனிவனைக் கோபித்துக்கொண்டு; ஓர் தண்டாயுதத்தைக் கைக்கொண்டு வில்வலன் முனிவரைக் கொலைசெய்ய நினைந்து வருதலும்; அப்போது அகத்தியமுனிவர் தனது கையில் தருப்பை ஒன்றை எடுத்து அதனைச் சிவபிரானுடைய படையாக நினைந்து விடுதலும்: அப்படையால் வில்வலன் தானும் மடிந்துபோதலும் அந்தக் கொடிய கள்வர் உறைகுற்ற இடத்தைவிட்டு நீங்கி; அப்பால் அகன்று போயினுர் அகத்திய முனிவர். 22

வில்வலன் வாதாவி வதைப் படலம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1267

காவிரி நீங்கு படலம்

செங்கை தூங்கிய தீர்த்த நீரொடுங், கொங்கின் பாற்செலக் குறிய மாமுனி
மங்கு கின்றஅம் மைந்தர் நேருரு, அங்கண் மேவினுர் அருந்த வத்தர்போல்.

தமது சிவந்த திருக்கரத்தில் தூக்கிக்கொண்டிருக்கும் காவிரி என்னும் தீர்த்தத்துடன் குறுகிய வடிவத்தையுடைய அகத்தியமாமுனிவன்; கொங்கநாட்டின்பாலாகச் செல்லும்போது; இறந்துபோன வில்வலன் வாதாவியான மைந்தர்இருவரும் அவ்விடத்து அரியதபோதனர் வடிவங் கொண்டு அகத்தியர் முன்பு எதிர்ப்பட்டு வந்தார்கள், 1

நேரு மைந்தர்கள் இருவர் நீணிறக், காரின் மேனியர் கறங்கு கண்ணினர்
தீரர் ஆற்றவுஞ் சினத்தர் ஒல்லென, ஆர வாரஞ்செய் தணுகி னரரோ.

எதிர்ப்பட்ட பிரமகத்திவடிவான பிள்ளைகள் இருவரும் நீண்ட மேகம் போலும் உருவுடையர்; சுழல்கின்ற கண்ணினை உடையவர்; வீரமுடையவர் மிகவும் கோபமுடையவராயும் ஒல்லென்று ஆரவாரஞ் செய்துகொண்டு அணுகி வந்தனர். 2

அண்மை யாகுவார் அகல்வர் மாமுனி, கண்முன் எய்துவர் கரந்து காண்கிலார்
விண்மு கிற்குளே மேவி ஆர்ப்பரால்' மண்மி சைப்பினும் வருவர் சூழ்வரே.

இப் பிரமகத்தி வடிவான இரு புதல்வர்களும் அகத்தியமுனிவருக்குக் கிட்ட வருவார்கள், அகன்று செல்வார்கள். பெருமுனிவனின் கண்முன் நிற்பர், மறைவர் காணப்படார். வானமுகிலிற்குள் மறைந்து இரைவார்கள், மண்ணின்மேலாகவும் வருவர், முனிவனைச் சூழ்ந்துகொள்வார்கள். 3

கோதில் ஆற்றல்சேர் கும்ப மாமுனி, ஈது நோக்கியே இவரை முன்னமே.
காதி னும்நமைக் கருதி வந்தனர், மாத வத்தினோன் மைந்தர் ஆதலால்.

உலக சேமத்திற்கென குறைவிலாத பெருவலிமை கொண்ட அகத்தியமுனிவர் இதனை நோக்கி இவர்களை முன்பு நாம் கொலைபுரிந்தோமாயினும் நம்மை மீண்டும் பகையாகக் கருதி வந்துள்ளார்க்ள்; இறந்த இவர் இப்படி வரக்காரணம் பெரும் தவவாளியான துர்வாச முனிவர்க்குத் தோன்றிய புதல்வர்கள் ஆதலால். 4

பேர்கி லாதஇப் பிரம கத்திநோய், திரு மாற்றினுல் சிவன தாள்களை
ஆர்வ மோடிவண் அருச்சிப் பாமெனு, நேரின் மாமுனி நினைந்து நின்றரோ.

எம்மை விட்டுப் பிரியாத பிரமகத்தி நோயானது திரும்படியாக; சிவபிரானுடைய திருவடிகளை அன்பினுல் அர்ச்சினை புரிவேன்; என்று தனக்கு வேறொருவர் நேரில்லாத அகத்தியமாமுனிவர் நினைவுகொண்டு நின்றுர். 5

ஆசில் கொங்கினுக் கணித்தின் ஓரிடை, வாச மீதென மகிழ்ந்து வீற்றிரீஇ
ஈச னுர்தமை இலிங்க மேனியில், நேச நெஞ்சினுன் நினைந்து தாபித்தான்.

குறைவிலாத கொங்கநாட்டிற்கு கிட்டவாக ஓர் பக்கரில் தங்கி; பூசனை புரிவதற்கு இது பொருந்துவதொன்றுகுமென மகிழ்வுற்று அங்கு வீற்றிருந்து; ஈசனை சிவலிங்கத் திருமேனியில் அன்புடைய நெஞ்சால் நினைந்து தாபித்தார். 6

தூய குண்டிகைத் தோயம் அன்றியே, சேய மாமலர் தீபந் தீம்புகை
ஆய போனகம் ஆதி யானவை, ஏயு மாற்றினுல் இனிது தேடினுன்.

தூய்மையான கமண்டலத்தூடுள்ள காவிரி தீர்த்தம் மட்டும் அல்லாது; இன்னமும் சிவந்த தாமரை மலர், தீபம், இனிய தூபம். அருமையாகச் செய்த திருவமுது ஆதியானவற்றை பொருந்தக்கூடிய நிலையால் இனிதுடன் மகிழ்ந்து தேடிக்கொண்டான். 7

விழுமி தாகிய விரதர் வியவே, வழியி ருந்திடும் வஞ்சர் ஆவிகொள்
பழிய கன்றிடப் பரமன் தாழ்மிசை, அழிவில் அன்பொடே அருச்சித் தானரோ.

விழுமிதாகச் சிறந்துள்ள நெறிநின்ற முனிவர்கள் மாண்டுபோக; வழியில் இருந்து ஏமாற்றி உணவு கொடுத்துக் கொலை புரிந்த வஞ்சனையுடைய இரு அசுரரின் உயிரைக் கொன்ற பழியானது; அகன்றிடும்படியாக சிவபிரான் திருவடிகள் மீதாக அழிவில்லாத பேரன்புடன் அர்ச்சனை புரிந்து துதித்தார் அகத்தியமுனிவர். 8

மங்கை பாகனை மற்றும் பற்பகல், சிங்கல் இன்றியே சிறந்த பூசைசெய்
தங்கண் மேவினுன் அவன்க ளுகிய, துங்க வெம்பவந் தொலைந்து போயதே.

பெண்ணொருபாகராகிய பெருமானை இம்வண்ணம் பற்பகலாக சங்கடம் ஏதும் இன்றிச் சிறந்த பூசனை செய்து; அகத்தியமுனிவர் அங்கு அந்த இடத்திலே தங்கி இருந்தார். அகத்தியமுனிவர் பாலான மேலான பாவம் தொலைந்துபோயது. 9

அனைய காலையில் அரிய திந்தமிழ், முனிவ ரன்செயல் முற்றும் நாடியே
துனியில் நாரதன் தொல்லை வானவர்க், கினிய கோமகன் இருக்கை எய்தினுன்.

அவ்வாறுகிய நேரத்தில் அரியதும் இனியதுமான தமிழைத் தந்த அகத்திய முனிவனின் செயல் முழுவதையும் ! ஞான உணர்வால் தெரிந்துகொண்டு; அச்சம் இல்லாத நாரத முனிவன் முன்னைத் தேவர்க்கெல்லாம் இனிய தலைவனுன இந்திரனது இருப்பிடத்திற்கு சென்றருளினுர். 10

**தாணு வின்பதந் தன்னை உன்னியே, வேணு வாகியே மெய்த்த வஞசெயுஞ்
சேணின் மன்னவன் செல்லு நாரதற், காணும் எல்லையிற் கழல்வ ணங்கினன்.**

ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதியின் திருவடி மலரைத் தியானித்த வண்ணம் மூங்கில் மரமாகி உருக்கொண்டு, அசுரர்க்கு அஞ்சி, உண்மையான தவத்தினைச் சீகாழியில் இருந்து புரிந்துள்ள வானஉலக மன்னவன் இந்திரன் அங்கு எழுந்தருளி வந்த நாரத முனிவரைக் கண்டமாத்திரத்தே எழுந்து அவர் பாதங்களை வணங்கினன். 11

**எழுதி மன்னவென் றெடுத்து, மார்புறத், தழுவி நன்றிவட் சார்தி யோவென
உழுவ லன்பினல் உரைப்ப வாசவன், தொழுத கையினன் இனைய சொல்லுவான்.**

பாதங்களில் முன்பு வீழ்ந்து வணங்கிய இந்திரனை நாரத பகவான் பார்த்து, தேவமன்னவனே எழுவாயாக என்று அவனைத் தமது கையால் எடுத்து மார்புடன் அணைத்துத் தழுவி, நன்றாக இவ்விடத்து இருக்கின்றாயோ என மேலான அன்பினால் உரைத்தலும், இந்திரன் அவரை வணங்கிய கையுடன் இனைய வார்த்தைகளைச் சொல்லுவான். 12

**இன்று காறுநின் னருளின் யானிவண், நன்று மேவினன் நாதன் பூசனைக்
கொன்ற துண்டுநீங் குரைப்பன் கேட்டியால், குன்ற மன்னதோர் குணத்தின்
மேலையோய்.**

இன்றுவரையும் உமது நல்லருளினால் யான் இவ்விடத்து நன்றுடன் இருந்தேன்; ஆனால், எம்பிரானின் பூசனைக்குக் குறை ஒன்று உண்டு. அது யாதென இங்கு நான் சொல்வேன் கேட்பீராக மலைபோன்ற கருணையான குணமுடைய மேலான முனிவர் பிரானே! என்றனன் இந்திரன். 13

**கோதின் மாமலர் குழுவு தண்டலைக், கேது நீரிலை இறந்து வாடுமால்
போதும் இல்லையால் பூசை செய்வதற், கீதே ரோகுறை யென்றி யம்பினன்.**

எம்பிரான் அர்ச்சனைக்கெனக் குறைவில்லாத பெரிய பூக்களைத் தருகின்ற மரங்கள் உடைய பூஞ்சோலை எதுதானும் நீரில்லாமல் பட்டு வாடுகின்றன. அதனாலே எம்பிரான் அர்ச்சனைக்குப் பூவும் இல்லை. இதுதான் எனக்கு இங்குற்ற ஒரு குறையாகும். 14

வேறு

இன்னவை பலவுங் கூறி இந்திரன் தவிசொன் றிட்டு
முன்னுற இருத்தித் தானும் முனிவரன் பணியால் வைக
அன்னதோர் அறிஞன் நின்னூர் அரசியல் பிறவும் ஈசன்
தன்னருள் அதனால் மேனாள் வருவது தளரேல் மன்னே.

இன்ன வார்த்தைகள் பலவற்றையும் இந்திரன் கூறி, ஒரு சிம்மாசனத்தை அங்கு இட்டு நாரத முனிவன் அதன் மீதிருத்தித் தானும் முனிவர் ஆணைப்படி வீற்றிருத்தலும், அன்ன நேரத்தில் அந்த மேலான அறிவுடைய நாரத முனிவர் இந்திரனை நோக்கி இழந்த உனது ஊர், அரசாட்சி, பிறசெல்வங்கள் யாவும் ஈசன் அருளினால் இன்னும் சில நாளில் வரும். ஆகவே, தளர்ச்சியடையாதே என்று கூறிப் பின்னரும், 15

ஆறணி சடையி னுனுக் கருச்சனை புரிதற் கிங்கோர்
ஊறுள தென்றே ஐய உரைத்தனை அதுவும் வல்லே
மாறிடுங் காலம் ஈண்டு வந்ததப் பரிசை யெல்லாங்
கூறுவன் கேட்டி யென்னுக் கோமகற் குரைக்க லுற்றுன்.

கங்கை நதியை அணிந்த சடையுடைய சிவபெருமானுக்கு அர்ச்சனை புரிய உனக்கு இங்கு ஒரு குறை உளது என ஐயனே நீ உரைத்தனை; அக்குறைதானும் மாறிப்போகின்ற காலம் ஒன்று உனக்கு இப்போது வந்துள்ளது; அந்தத் தன்மை எல்லாவற்றையும் நான் இப்பொழுது கூறுவேன்; கேட்பாயாக என்று தேவ அரசனுன இந்திரனுக்கு நாரத முனிவர் சொல்லத் தொடங்குவார். 16

தன்னிகர் இலாத முக்கட் சங்கரன் பொதிய வெற்பின்
முன்னுறை கென்று கும்ப முனிவனை விடுத்த வாறும்
அன்னவன் விந்தந் தன்னை அகன்பிலத் திட்ட வாறும்
துன்னெறி புரிந்த வெஞ்சூர் மருகரைத் தொலைத்த வாறும்.

தனக்கு நிகரில்லாத மூன்று கண்ணுடைய பரம்பொருளான சிவபிரான் அகத்திய முனிவனை, நீ சென்று பொதிய மலையில் இருப்பாயாக என விடுத்த வாறும், அந்த அகத்திய முனிவர் விந்தம் என்னும் மலையை அகன்ற பாதாளத்தில் இட்ட தன்மையும், தீய நெறிகளைச் செய்து உலகில் முனிவரைக் கொலைபுரிந்த சூரபன்மன் மருமக்களான வில்வலன் வாதாவியைத் தொலைத்த வரலாறும். 17

அப்பழி தீரு மாற்றுல் ஐதெனக் கொங்கின் நண்ணி
முப்புர மெரித்த தொல்லை முதல்வனை அருச்சித் தேத்தி
மெய்ப்பரி வாகி அங்கண் மேவிய திறனும் முற்றச்
செப்பினன் பின்னும் ஆங்கோர் செய்கையை உணர்த்த லுற்றுன்.

அவ்வாறுன பழி தீரும்பொருட்டாக மிகு விரைவுடன் கொங்குநாட்டை அகத்திய முனிவர் அடைந்து, முப்புரமெரிசெய்த முன்னவர்க்கும் முன்னுன பகவானை அருச்சனை புரிந்து வழிபட்டு, உண்மையான அன்பாகி அங்கு பழிதீர்ந்து தங்கி இருக்கின்ற திறங்களாம் முழுவதையும் இந்திரதேவனுக்குச் சொன்னுர்; பின்னரும் அவனுக்கு ஒரு சூழ்ச்சியான முறையையும் சொல்லிக்கொடுத்தார் நாரத முனிவர். 18

அருந்தவ முனிவன் கொங்கின் அமலனை அருச்சித் தங்கண்
இருந்திடு கின்றுன் நாடி ஏகினன் அவன்பா லாகப்
பொருந்துகுண் டிகையின் மனனும் பொன்னியா றதனை இங்கே
வரும்பரி சியற்றின் உன்றன் மனக்குறை தீரு மென்றுன்.

இந்திரனே! அருந்தவ முனிவன் அகத்தியன் மலைநாடான கொங்க தேசத்தின்பால் சிவபிரானை அருச்சித்துக்கொண்டு அங்கு இருந்திடுகின்றுன். அதனை நான் நாடிக் கண்டு கொண்டு இங்கு வந்தேன். அவன் பக்கராகம் பொருந்திய கமண்டலத்தூடே இருக்கின்றது காவிரி என்னும் தீர்த்தம்; அந்தக் காவிரியாற்றினை இங்கே வரக்கூடிய செயலை நீ புரிந்தால் உன்னுடைய பூஞ்சோலைக்கு நீரில்லாத உனது மனக்குறை தீரும் என்றுர் நாரதபகவான். 19

குரவன்ஈ துரைத்த லோடுங் குறுமுனி கொணர்ந்து வைத்த
வரநதி தனையிக் காவில் வரவியற் றிடுமா றென்கொல்
பெருமநீ யுரைத்தி யென்னப் பேரமு தருத்தி யேத்திக்
கரிமுகத் தேவை வேண்டில் கவிழ்த்திடும் அதனை என்றான்.

மேலோரான நாரத முனிவர் இதைச் சொல்லலோடும் இந்திரன் சொல்வான், ஐயனே! அகத்திய முனிவர் கொணர்ந்து அங்கு வைத்திருக்கின்ற வரத்தால் சிறப்புடைய காவிரியை நான் இப்பூஞ்சோலையில் வரும்படியாகச் செய்வதற்கு வழி எப்படியாகும் பெருமானே நீர் அதனை சொல்வீராக என்னலும், அப்போது நாரத பகவான் நிறைந்து சிறந்த அமுதினை நிவேதித்து வணங்கி, யானை முகமுடைய கடவுளை வேண்டுதல் புரிந்தால் எம்பெருமான் அந்தக் கமண்டலத்தைக் கவிழ்த்திடும் என்றார். 20

குணப்பெருங் குன்ற மன்ன கோதிலா அறிவன் இன்ன
புணர்ப்பினை இசைத்த லோடும் புரந்தரன் பொருமல் நீங்கிக்
கணிப்பிலா மகிழ்ச்சி யெய்திக் காசிபன் சிறுவர் கொண்ட
அணிப்பெருந் திருவும் நாடும் அடைந்தனன் போன்று சொல்வான்.

நற்குணம் என்னும் மலைபோன்று விளங்கும் குறைவிலாத நாரதமுனிவன் இந்த வகையான சூழ்ச்சியினைச் சொல்லிக்கொடுத்தலோடும் இந்திரதேவன் அது கேட்டுத் தனது கவலை யாவும் நீங்கி அளவு காண்பரிய மகிழ்ச்சி அடைந்து காசிப முனிவன் பிள்ளைகளான சூரன் முதலியோர் தன்னிடமிருந்து பறித்து எடுத்துக்கொண்ட, அழகுடன் விளங்கும் செல்வ நிலைகளும், நாடும் திரும்பப் பெற்றுக் கொண்டான் போன்று சொல்கின்றான். 21

எந்தைநீ இனைய எல்லாம் இயம்பினை அதனால் யானும்
உய்ந்தனன் கவலை யாவும் ஒருவினன் முனிவன் பாங்கர்
வந்திடு மாறும் ஈண்டு வரவுன தருளால் இன்னே
தந்திமா முகற்குப் பூசை புரிகுவன் தக்கோய் என்றான்.

எந்தை பிரானே! நீர் எல்லாம் சொன்னீர் அதனால் யானும் உய்ந்தேன். கவலை யாவும் நீங்கினன். அகத்திய முனிவன் பால் பொருந்தி இருக்கின்ற ஆறு இங்கு வருதற்கு உமது அருளால் இப்பொதே யானைமுகமுடைய விநாயகப் பெருமானுக்குப் பூசைசெய்வேன் தகுதியுடைய முனிவர் பிரானே என்றான் இந்திரதேவன். 22

அருள்முனி இதனைக் கேளா அன்னதே கருமம் வல்லே
புரிகரி முகவற் கைய பூசனை யென்று கூறிப்
பரவிய இமையோர் கோனைப் பார்மிசை நிறுவிப் போந்து
சுரரெலாம் பரவு கின்ற தொல்லையம் பதத்தி னுற்றான்.

அருளே வடிவான நாரத முனிவன் இதனைக் கேட்டுச் சொல்வார். இந்திரனே! அதுதான் செய்யவேண்டிய கருமம் விநாயகப் பெருமானுக்குப் பூசனையைப் புரிவாயாக எனக்கூறிவிட்டுத், தன்னை வணங்கிய தேவர்கள்அரசனைப் பூமியிடத்தாக நிறுத்திவிட்டுத் தேவர்களெல்லாம் போற்றுதல் செய்கின்ற தனது தொன்மையான அழகிய உலகிற் சென்றார். 23

சேறலும் புணர்ப்பு வல்லோன் திங்களும் அரவுங் கங்கை
யாறொடு முடித்த அண்ணல் அருள்புரி முதல்வன் றன்னை
மாறகல் மேனி கொண்டு வரன்முறை தாபித் தன்னான்
சீறடி அமரர் கோமான் அருச்சனை செய்து பின்னர்.

சூழ்ச்சி வல்லவரான நாரதமுனிவர் செல்லுதலும், இந்திரதேவன் இளம் பிறையையும் நாகபாம்பையும் கங்கையாற்றுடன் சேரத் திருச்சடைமீதணிந்து கொண்ட சிவபிரான் தந்தருளிய முதல்வரான விநாயகப் பெருமானின் அழகுடன் விளங்குவதும் குறைவு; அகன்றதுமான திருமேனி ஒன்றினைச் செய்துகொண்டு முறைப்படி அத்திருவுருவைத் தாபித்து அவருடைய திவ்விய பெருமையான்ற சிறிய பாதங்களை அர்ச்சனை புரிந்து பிற்பாடாக, 24

இக்கொடு தென்னங் காயும் ஏனலின் இடியுந் தேனும்
முக்கனி பலவும் பாகும் மோதக முதல முற்றுந்
தொக்குறு மதுர மூலத் தொடக்கமுஞ் சுவைத்தீம் பாலும்
மிக்கபண் ணியமு மாக விருப்புற நிவேதித் தானால்.

கரும்புடன் இளநீரும் தினைமாவும் தேனும், வாழை மா பலா என்னும் மூன்று கனிகள் பலவும், சர்க்கரைப் பாகும் மோதகம் முதலாக உள்ள பண்டங்கள் முழுவதும் தொகுதியாக உற்ற மதுரமான கிழங்குவகைகள் முதலியனவும், சுவைமிக்க இனிய பாலும், மிகுந்த பலகார வகைகளுமானவற்றை மனதில் நிறைந்த பெருவிருப்புடன் எம்பிரானுக்கு நிவேதித்தான் இந்திரதேவன். 25

இவ்வகை நிவேதித் தேபின் எம்பிரான் றன்னை ஏத்த
மைவரை யனைய மேனி மதகரி முகத்துத் தோன்றல்
கவ்வையோ டனந்த கோடி கணநிரை துவன்றிச் சூழ
அவ்விடை விரைவால் தோன்ற அஞ்சினன் அமரர் கோமான்.

இவ்வகை நிவேதித்த பிற்பாடு எம்பெருமான் தன்னை வணங்க, கரிய மலைக்கு ஒப்பான திருமேனி உடைய மதம்பொழியும் யானை முகங்கொண்ட அருள்வள்ளலான விநாயகக் கடவுள் பேரொலியுடன் அநந்தகோடி பூதகணங்கள் நெருங்கிச் சூழ அவ்விடத்து விரைவுடன் தோன்றுதலும், அவரைக் கண்டவுடன் பயம் கொண்டான் தேவர்க்கரசனான இந்திரதேவன். 26

அஞ்சலை மகவா னென்ன ஐங்கரக் கடவுள் கூற
நெஞ்சகந் துணுக்கம் நீங்கி நிறைந்தபே ருவகை யெய்தி
உஞ்சன னென்று வள்ளல் உபயமா மலர்த்தாள் மீது
செஞ்செவே சென்னி தீண்டச் சென்றுமுன் வணக்கஞ் செய்தான்.

இந்திரனே! அஞ்சாதே என்று ஐந்து கரமுடைய கடவுள் கூறுதலும், இந்திரதேவன் தனது நெஞ்சிற் கொண்ட பயம் நீங்கி நிறைந்த பெரிய மகிழ்ச்சி கொண்டு, உய்ந்தேன் யான் என்று வள்ளலாகிய எமது ஐயனின் தாமரை மலர்போன்ற இரண்டு பாதங்களிலும் செம்மையுடன் தனது தலையானது தீண்டிடும்படி முன்னாகச் சென்று வணங்கஞ் செய்தான். 27

பூண்டிகழ் அலங்கல் மார்பில் பொன்னகர்க் கிறைவன் முக்கண்
ஆண்டகை சிறுவன் தாள்மேல் அன்பொடு பணிந்து போற்ற
நீண்டதோர் அருளால் நோக்கி நின்பெரும் பூசை கொண்டாம்
வேண்டிய பரிசென என்றான் வேழமா முகனை வென்றான்.

ஆபரணங்களுடன் திகழ்ந்து விளங்கும் மலர்மாலைகள் அணியப்பெற்ற தேவ உலகிற்கு அரசனான இந்திரதேவன், மூன்று கண்களை உடைய சிவபிரானது திருக்குமாரரின் திருவடி மலர்மீது அன்பொடு பணிந்து போற்றிநிற்ப, எம்பிரான் நெடுகிய அருளுடன் இந்திரனை நோக்கி நினது பெரும் பூசனையை யாம் ஏற்றுக்கொண்டோம். நினக்கு வேண்டிய வரம் யாது? எனக் கேட்டருளினார் யானை முகமுடைய கயமுகாசுரனை வென்றருளிய விநாயகக் கடவுள். 28

இந்திரன் அதுகேட் டைய எம்பிராற் காக ஈண்டோர்
நந்தன வனத்தை வைத்தேன் அன்னது நாரம் இன்றிச்
செந்தழ லுற்ற லென்னத் தினகரன் சுடரால் மாய்ந்து
வெந்துக ளான தண்ணல் மேலடு புரமே யென்ன.

இந்திரன் அதுகேட்டு, ஐயனே! எம்பிரான் பூசைக்காகப் பூக்கள்வேண்டி இவ்விடத்து ஒரு நந்தவனத்தை வைத்தேன். அந்த நந்தவனம் நீரில்லாது நெருப்புப் பட்டதன்மை போலக் கருகி சூரிய தேவனின் வெயிலினால் மாய்ந்து துகளாகிப் போயது. எதுபோலும் எனில், எமது பெருமான் முன்னர் எரித்தருளிய முப்புரம் போன்று. 29

என்னலும் ஏந்தல் கேளா ஏழ்பெருந் தலத்தின் நீரும்
முன்னுறத் தருகோ வான முழுப்பெருங் கங்கை தானும்
பன்னதி பிறவும் இங்ஙன் விளித்திடோ பரவை யாவுந்
துன்னுறு விக்கோ ஒன்று சொல்லுதி வேண்டிற் றென்றான்.

என்று இந்திரன் கூறலும் எம்பிரான் கேட்டருளி, இந்திரனே! உனக்கு முன்னாக ஏழு பெரிய உலகில் உள்ள நீரையும் தரட்டோ, அல்லது வானத்தில் உள்ள மிகப்பெரிய ஆகாய கங்கையையும் இன்னும் வேறு ஆறுகளையும் இங்கே அழைத்திடட்டோ அல்லது சமுத்திரங்கள் யாவையும் வரும்படி செய்வோமா? இதில் விரும்பியதொன்றைச் சொல்வாயாக என்றார். 30

ஐங்கரக் கடவுள் இவ்வா றறைதலும் அனைத்தும் நல்கும்
பங்கயத் தயனு மாலும் பரவுறு பழையோய் இங்ஙன்
அங்கவற் றொன்றும் வேண்டேன் அதுநினக் கரிதோ யானொன்
றிங்குனைக் கேட்ப னென்னா இனையன இசைக்க லுற்றான்.

ஐந்து கரங்கொண்ட கடவுள் இவ்வாறு கூறியருளலும் அதுகேட்டு, அனைத்தையும் படைக்கின்ற பிரமதேவனும், நாராயணக் கடவுளும் வணக்கஞ் செய்யும் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பரம்பொருளே இங்கு தேவரீர் சொல்லியவற்றுள் ஒன்றும் வேண்டேன் அவையெல்லாம் தேவரீருக்கு அரியதோ. யான் அதல்லாது ஈதொரு காரியத்தை மட்டும் உன்னைக் கேட்பேன் என்று இந்த வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினான் இந்திரதேவன். 31

சகத்துயர் வடபொன் மேருச் சாரலின் நின்றும் போந்து
மிகத்துயர் எவர்க்குஞ் செய்யும் வெய்யவள் சிறுவர்ச் செற்று
மகத்துயர் விதியின சேய்க்கு வருவித்த நிமலன பொற்ருள்
அகத்தியன் கொங்கின் பால்வந் தருச்சனை புரிந்து மேவும்.

பூமியில் உயர்வாய் விளங்கி நிற்கும் வடக்கேயுள்ள பொன்மயமான மேரு மலைச் சாரலில் நின்றும் அகத்திய முனிவர் புறப்பட்டுவந்து; வரும் வழியில் மிகவும் துயரப்பாடுகளை எவர்க்கும் செய்யும் கொடியவளான அசமுகியின் பிள்ளைகள் வில்வலன் வாதாவி என்னும் இருவரையும் கொன்று; சிவபிரானை நீக்கிச் செய்த யாகத்கலே துயரத்தை, பிரம்ம புத்திரனுன தக்கனுக்கு வருவித்த நின்மல சொரூபியான சிவபிரான் பொன்னடிகளை, தனக்கு உற்ற பாவவினை நீங்குமாறு அகத்திய முனிவர் கொங்க நாட்டின் பாலாக வந்து அருச்சனை புரிந்து கொண்டிருக்கின்ருர் 32

அன்னவன் தனது மாட்டோர் அணிகமண் டலத்தி னூடே
பொன்னியென் றுரைக்குந் தீர்த்தம் பொருந்தியே இருந்த தெந்தாய்
நன்னதி யதனை நீபோய் ஞாலமேற் கவிழ்த்து விட்டால்
இன்னதோர் வனத்தின் நண்ணும் என்குறை தீரு மென்ருன்.

அந்த அகத்திய முனிவனின் பாங்கராக அழகிய கமண்டலத்துள் காவிரி என்று சொல்லப்பெறும் தீர்த்தம் பொருந்திக்கொண்டு இருந்கது. எந்தை பிரானே! அந்த நல்ல நதியினை நீர் சென்று இந்தப் பூமியிலே கவிழ்த்துவிட்டால் இந்தச் சீகாழி வனததில் வரும்; எனது குறையும் நீங்கும் என இந்திரன் கூறினுன். 33

பாகசா தனன்இம் மாற்றம் பகர்தலும் பிறைசேர் சென்னி
மாகயா னனத்து வள்ளல் மற்றிது செய்து மென்னு
ஓகையால் அவனை அங்கண் நிறுவிப்போய் ஒல்லை தன்னில்
காகமாய் முனிபா லான கமண்டல மிசைக்கண் உற்ருன்.

இந்திரன் இந்த வார்த்தையைச் சொல்லும் அதுவேளை; இளம்பிறையணிந்த திருமுடியை உடைய யானை முகமுடைய அருள் வள்ளலான விநாயகப் பெருமான், இந்திரனே! நீ விரும்பியபடி இதனைச் செய்வோமென்று மகிழ்வுடன் இந்திரனை அங்கே நிற்பாட்டிவிட்டுச் சென்று; விரைவுடன் காகமாய்த் திருஉருக்கொண்டு அகத்திய முனிவனது கமண்டலத்தின் வாயின் மேலாக அமர்ந்தருளினுர். 34

கொங்குறு முனிவன் பாங்கர்க் குண்டிகை மீதிற் பொன்னி
சங்கரன அருளின் வந்த தன்மையும் புணர்ப்பு முன்னி
ஐங்கரன் கொடியாய் நண்ண அகத்தியன் அவனென் ருேரான்
இங்கொரு பறவை கொல்லாம் எய்திய தென்று கண்டான.

கொங்க நாட்டில் இருக்கின்ற அகத்திய முனிவன் பக்கராகக் கமண்டல மீதில் காவிரியாறு, சிவபிரான் அருளினுல் வந்த தன்மையும், அகத்திய முனிவன் உன்பொருட்டாகக் கையை; போ என்று சொல்வதுபோல அசைத்தாலே நீ அவனைவிட்டு நீங்கலாம் எனச் சிவபிரான் அருள்செய்த சூழ்ச்சியையும்; திருவுளத்து எண்ணியே அதன்படி காகவடிவாய் வந்து கமண்டலமீது எம்பிரான் இருத்தலும் அகத்திய முனிவன் அதனைக்கண்டு; ஈது விநாயகப் பெருமானென அறியாதவனுய்; இதேது இங்கொரு பறவையல்லவோ வந்திருக்கிறது என எண்ணிக் கொண்டான். 35

கண்டனன் பிள்ளை செல்லக் கரதல மெடாநின் றேச்ச
அண்டருக் கலக்கண் செய்த கயமுகத் தவுணற் செற்றேன்
குண்டிகை அதனைத் தள்ளிக் குளிர்புனற் கன்னி யன்னான்
பண்டையில் இசைவு செய்தான பாரில்நீ படர்தி என்றான்.

கண்ட அகத்தியமுனிவன் காகத்தைக் கலைக்கும்படி தனது கையினை எடுத்து வீசுதலும்; அதுவேளை தேவர்கட்கு இடுக்கண் செய்து நின்ற கயமுகாசுரனைச் சங்காரம் செய்த விநாயக் கடவுள்; தமது திருக்காலால் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டு; அதனுள் இருக்கும் காவிரியை நோக்கி, குளிர்ந்த நீரையுடைய கன்னிப்பெண்ணே! அதோ பார். அந்த அகத்திய முனிவன் முன்னர் தான் போ என்னும்படி உன்னைக் கை காட்டினால் நீ போகலாம் எனச் சம்மதம் கொண்டான். அப்படியே உன்னைப் போகும்படி கை தூக்கிக் காண்பிக்கின்றான். பூமியில் நீ செல்வாயாக என்றார். 36

என்னலுங் காஞ்சி தன்னில் எம்பிரான் உலகம் ஈன்ற
அன்னைதன் அன்பு காட்ட அழைத்திட வந்த கம்பை
நன்னதி போல விண்ணும் ஞாலமும் நடுங்க ஆர்த்துப்
பொன்னியா றுலகந் தன்னில் பொள்ளெனப் பெயர்ந்த தன்றே.

என்று எம்பிரான் செப்பலும், காஞ்சியம்பதியிலே எம்பெருமான் உலகம் யாவையும் பெற்ற தாயான காமாட்சி அம்மையாரது அன்பினைக் காட்ட கம்பையாற்றை அழைத்தபொழுது அங்கு வந்த கம்பையாறான நல்ல ஆற்றின் வேகங்கொண்ட பெருக்கினைப்போல; வானுலகும் மண்ணுலகும் நடுங்கும்படி இரைந்து கொண்டு காவிரியாறு உலகிலே விரைவுடன் பாய்ந்தோடியது. 37

பெயர்தலும் உமைதன் பிள்ளை பிள்ளையின் உருவம் நீத்துப்
பயிறரு மறைநூல் வல்ல பார்ப்பன மகன்போற் செலலச்
சயமிகு தவத்தின் மேலோன் தன்மையங் கதனை நோக்கி
உயிர்முழு தடவே தோன்றும் ஒருவன்போல் உருத்து நின்றான்.

காவிரியாறு பெயர்ந்தோடுதலும் உமையம்மையார் பாலகர், தான் கொண்ட காக வடிவினை நீக்கி, பயின்று ஓதுகின்ற வேதங்களில் வல்லமையுடைய பிராமணப் பிள்ளைபோல வடிவங்கொண்டு செல்லலும், வெற்றிதரும் விளைவினை யுடைய தவத்தின் வேலவரான அகத்திய முனிவர் தன்மை இதனைக் கண்டு கொண்டு உயிர் முழுவதையும் வதைசெய்யும்படி, கோபத்தினால் நின்ற உருத்திர மூர்த்தியைப் போன்று கோபங் கொண்டு நின்றார். 38

தேவனோ அவுணன் தானோ அரக்கனோ திறலின் மேலோன்
யாவனோ அறிதல் தேற்றேன் ஈண்டுறு நதியைச் சிந்திப்
போவனோ சிறிது மெண்ணா அகந்தையன் போலும் அம்மா
யாவனோ வன்மை தன்னை அறிகுவன் விரைவின் என்றான்.

இவன் தேவனோ? அசுரன் தானோ? இராட்சதனோ? வலியின் மேலான யாவனோ? அறிய மாட்டேன்; இங்குள்ள எனது காவிரியெனும் ஆற்றைச் சிந் திக் கவிழ்த்துவிட்டுப் போவனோ; சிறிதும் எதுவும் வருவது பற்றி எண்ணாத அகந்தையன் இவன்போலும்; அம்மம்மா யாவனாய் இருக்கட்டும் இவனது வலிமையைக் கெட்டித்தனத்தை விரைவில் யான் அறிகுவேன் என்றான். 39

விரைந்தவன் பின்ன ரேக மெய்வழி பாடு செய்வோர்
அரந்தையை நீக்கும் எங்கோன் அச்சுறு நீரன் போல
இரிந்தனன் போத லோடும் இருகையுங் கவித்த மாக்கித்
துரந்தனன் முனிவன் சென்னி துளக்குறத் தாக்க உன்னி.

அகத்திய முனிவன் விரைவுடன் பிராமணச் சிறுவர் பின்னை ஓடிச் செல்ல; உண்மை வழிபாடு செய்வோரது கவலை துயரம் எல்லாம் நீக்கும் எங்கள் கடவுள்; தான் அகத்தியருக்குப் பயந்துள்ளான்போல விரைவுடன் பயந்தோடலும்; அகத்தியமுனிவர் தனது இரண்டு முன் கைகளையும் மடக்கிப் பிடித்துக்கொண்டு ஓடுகின்ற சிறுவனைக் கலைத்துச்சென்றார்; அச்சிறுவனின் தலை அதிரும்படி குட்ட நினைந்துகொண்டு. 40

குட்டுவான் துணிந்து செல்லுங் குறுமுனிக் கணிய னாகிக்
கிட்டுவான் விசும்பி னூடு கிளருவான் திசைக டோறும்
முட்டுவான் பின்பு பாரின் முடுகுவான் அனையன் கைக்கும்
எட்டுவான் சேய னாகி ஏகுவான் எவர்க்கும் மேலோன்.

குட்டும்படி துணிந்து செல்லுகின்ற குறிய வடிவுடைய அகத்திய முனிவருக்குச் சமபித்தவராய் கிட்டே நிற்பார்: திடீரென வானமீது கிளர்ந்து, எழுவார் திக்குகள் தோறும் அணுகி, திக்கு மாறி ஓடுவார்; அகத்திய முனிவருடைய கைக்கும் குட்டும்படி எட்டுவார்; விரைவில் தூரச் சென்றிடுவார்; எவர்க்கும் மேலாகிய பிராமணச் சிறுவரின் திருவுருவங் கொண்ட எமது கடவுள். 41

இப்படி முனிவன் சீற்றத் தலமர யாண்டு மேகித்
தப்பினன் திரித லோடுந் சாலவுந் தளர்ச்சி யெய்திச்
செப்பரி திவன்றன் மாயஞ் செய்வதென் இனியா னென்னு
ஒப்பருந் தவத்தோன் உன்ன எந்தையஃ துணர்ந்தான் அன்றே.

இப்படி அகத்திய முனிவன் கோபத்தால் உலைய; எல்லா விடமும் ஓடி ஓடி அகத்திய முனிவருக்கு எட்டாது எம்பிரான் திரிதலோடும்; அகத்திய முனிவர் ஓடி ஓடிக் களைத்து மிகவும் தளர்ச்சி எய்தி; இப்பிள்ளையினுடைய மாயம் சொல்ல முடியாது; ஐயகோ செய்வது இனி யான் என்னவாகும் என்று ஒப்பற்ற தவத்தாளியான அகத்திய முனிவர் வேதனையுடன் நினைப்ப; அவரின் உள்ள நோவை எந்தை பெருமான் உணர்ந்து கொண்டார். 42

ஓட்டமோ டுலவு முன்னோன் ஒல்லையில் தனது மேனி
காட்டினன் முனிவன் காணக் கதுமெனக் கலங்கி அந்தோ
கோட்டிப முகனே ஈண்டுக் குறுகினன் அவனை யானே
ஈட்டொடு துரந்தேன் கொல்லென் றேங்கினன் இரங்கு கின்றான்.

ஓட்டமோடு திருவிளையாட்டாக உலாவி நின்ற முன்னவரான விநாயகப் பெருமான் விரைவுடன் தனது உண்மையான திருமேனியைக் காட்டினன்; அகத்திய முனிவர் கண்ணுற்று திடீரென அச்சங் கொண்டு உள்ளங் கலங்கி: அந்தோ கொம்பினை உடைய யானை முகமுடைய கடவுளோ இவ்விடத்து வந்தருளினார்; அவரை யானு குட்டும்படி வலியுடன் தொடர்ந்து துரத்தினேன்; என்று ஏங்கினார் இரக்கப்பட்டு வருந்துகின்றார் அகத்திய முனிவர். 43

இரங்கிய முனிவன் முன்னம் ஏந்தலைப் புடைப்பான் கொண்ட
கரங்களை எடுத்து வானில் காருரும் ஏறு வெற்பின்
உரங்கிழி தரவே நீங்கா துரப்பினில் வீழ்வ தேபோல்
வரங்கெழு தனது நெற்றி வருந்துறத் தாக்கல் உற்றான்.

இரங்கித் துயருற்ற அகத்திய முனிவர், முன்னே எமது கடவுளைக் குட்டும்படி தான் கவித்துப் பிடித்துக்கொண்ட முன்கைகளை எடுத்து; வானத்திற் தோன்றும் மேகங்களிலிருந்து வெளிப்படும் கொடிய இடியேறு; மலையினுடைய வலிகெட அதனை மீது விழ்வதே போன்று; வரத்தால் மிகுந்த தனது நெற்றியில் நன்றாக வருந்தி நோவும்படி குட்டினார். 44

தாக்குதல் புரிந்த காலைத் தாரகப் பிரம மான
மாக்கய முகத்து வள்ளல் வரம்பிலா அருளி னோடு
நோக்கியுன் செய்கை என்னை நுவலுதி குறியோய் என்னத்
தேக்குறு தமிழ்தேர் வள்ளல் இனையது செப்பு கின்றான்.

அகத்திய முனிவன் தனது நெற்றியில் தாக்கி மளமளவெனக் குட்டிய காலையில், தாரக எழுத்தென்னும் ஓங்காரத்தின் சுழிவடிவமான பெரிய யானை முகமும் உட்பொருளான பிரமசொரூபமுமாய் விளங்கும் அருட்கொடையாளியாகும் விநாயகக் கடவுள், அளவுகடந்த பேரருளால் அகத்திய முனிவனைப் பார்த்து, அகத்திய முனிவனே! இது என்ன உனது செயல்? சொல்லுவாயாக என்னலும், அதுவேளை தித்திப்புடன் தேக்குகின்ற தமிழைத் தந்த அகத்திய முனிவர் இதனைச் சொல்லுகின்றார். 45

அந்தண குமரன் என்றே ஐயநின் சிரமேல் தாக்கச்
சிந்தனை புரிந்தேன் யாதுந் தெளிவிலேன் அதற்குத் தீர்வு
முந்தினன் இயற்று கின்றேன் என்றலும் முறுவல் செய்து
தந்தியின் முகத்து வள்ளல் அலமரல் தவிர்தி யென்றான்.

பிராமணச் சிறுவனென நினைவுற்று, ஐயனே! நினது தலை மேலாகக் குட்டும்படி நினைவுற்றேன். யாதொன்றும் தெளிந்து கொள்ளும் நிலையுடையேன் அல்லனாயினேன்; அப்படியாக நினைந்த எனது பாதகத்திற்கு ஏற்ற தண்டனையை முன்னுக்குச் செய்துகொள்ளுகின்றேன் என்று கூறலும்; எம்பிரான் புன்சிரிப்புக் கொண்டு யானைமுகமுடைய அருட்செல்வர், அகத்தியனே! மனத்துயரத்துடன் இதைச் செய்தலை நீக்குவாயாக என்றார். 46

என்றலுந் தவிர்ந்து முன்னோன் இணையடி மிசையே பல்கால்
சென்று சென்றிறைஞ்சி யன்னோன் சீர்த்திய தெவையும் போற்றி
உன்றிறம் உணரேன் செய்த தவற்றினை உளத்திற் கொள்ளேல்
நன்றருள் புரிதி என்ன நாயகன் அருளிச் செய்வான்.

என்றலும் அகத்திய முனிவர் குட்டுதலைத் தவிர்ந்து முன்னவரான விநாயகப்பெருமானின் என்றும் துணையான திருவடிகளை; சென்று சென்று பலகாலும் வணங்கி, பெருமானுடைய சிறப்புக்கள் எவைகளையும் எடுத்துப் போற்றுதல் புரிந்து! ஐயனே! உம்முடைய திருவிளையாடலை நான் உணரேன்; யான் செய்த தவற்றினைத் திருவுளத்துக் கொள்ளவேண்டாம். நன்றாகிய அருளினைத் தந்தருள்வீராக என்னலும் எம்பிரான் அருளுடன் திருவாய் மலர்ந்தருளுகின்றார். 47

புரந்தரன் எந்தை பூசை புரிதரு பொருட்டால் ஈண்டோர்
வரந்தரு காமர் தண்கா வைத்தனன் அதுநீ ரின்றி
விரைந்தது பொலிவு மாழ்கி வெறுந்துகள் ஆத லோடும்
இரந்தனன் புனல்வேட் டெம்மை இயல்புடன் வழிபட் டிந்நாள்.

அகத்தியனே! கேட்பாயாக, இந்திரதேவன் எந்தை பெருமான் பூசை புரியும் பொருட்டாக இவ்விடத்து எல்லாச் சிறப்பையும் தரவல்ல ஓர் அழகிய குளிர்மை தங்கிய பூஞ்சோலையை வைத்தனன். அது நீர் இல்லாமல் விரைவுடன் பொலிவு மாழ்கி துகளாகி எரிந்து போதலும்; நீர்வேண்டி எம்மை இரந்து இன்று இயல்பான முறையினால் வழிபட்டு வேண்டினான். 48

ஆதலின் கொடிபோல் யாமுன் னரும்புனற் குடிகை மீது
காதலித் திருந்து மெல்லக் கவிழ்த்தனம் அதனை ஈண்டுப்
போதலுற் றிடவுஞ் சொற்றும் பொறுதுநீ செய்த வற்றில்
யாதுமுட் கொள்ளேம் அவ்வா றினிதென மகிழ்தும் அன்றே.

ஆனதன்மையில் யாம் காகம்போல் வடிவுகொண்டு உனது அரிய காவிரி என்னும் தீர்த்தம் நிறைந்த கமண்டலத்தின் மீது காதலுடன் வந்திருந்து மெதுவாக அதனைக் கவிழ்த்துவிட்டு, அந்த ஆற்றை இவ்விடத்து ஓடிப் போகவும் சொன்னோம்; இத்தன்மைகண்டு நீ சகிக்கமுடியாது செய்தவற்றில் யாதினையும் யாம் எண்ணமாட்டோம். நீ செய்ததெல்லாம் நன்றென்றே நாம் மகிழ்ந்து கொள்வோம்; 49

ஈண்டுநீ புரிந்த தெல்லாம் எமக்கிதோ ராட லென்றே
காண்டுமா லன்றி நின்பால் காய்சினங் கொண்டேம் அல்லேம்
நீண்டசெஞ் சடையெம் மையன் நேயன்நீ எமக்கும் அற்றே
வேண்டிய வரங்கள் ஈதுங் கேண்மதி விரைவின் என்றான்.

இவ்விடத்து நீ செய்தது எல்லாம் எமக்கிதோர் ஆடல் என்றே கண்டு கொள்வோம்; அன்றி உன்பால் எக்காரணம் பற்றியும் வருத்துகின்ற கோபத்தைக் கொண்டோம் அல்லம். நீ நீண்ட சிவந்த சடையுடைய எமது தந்தையின் அன்பன் ஆதலால், எமக்கும் அப்படியே அன்பனுவாய். உனக்கு வேண்டிய வரங்களைத் தருகின்றோம், அவைகளை விரைவாகக் கேட்டுக் கொள்வாயாக என்றார் விநாயகக் கடவுள். 50

வேறு

என்னு இதுசெப் பலும்எம் பெருமான், முன்னு கியதோர் முனிவன் பணியா
உன்னு ரருள்எய் தலின்உய்ந் தனன்யான், நன்னு யகனே எனவே நவில்வான்.

என்று இதனை எம்பெருமான் சொல்லியருளுதலும்; எமது பெருமான் முன்னாகி நின்ற ஒருவனாகிய அகத்திய முனிவன் எம் ஐயனைப் பணிந்து, ஐயனே! தேவரீரது ஆர்ந்து விளங்கும் திருவருள் எய்தப்பெறுதலின் யான் உய்ந்தேன். எனது நன்மை தரும் நாயகனே! இதனை அறிந்தருள்வீராக, எனவே, பின்வருவனவற்றைச் சொல்வான். 51

நின்பா லினும்அந் நெடுமா லுணரான், தன்பா லினுமே தமியேன் மிகவும்
அன்பா வதொர்தன் மையளித் தருள்நீ, இன்பால் அதுவெஃ குவன்எப் பொழுதும்.

பெருமானே! தேவரீர் இடத்தும்; அந்த நெடிய வடிவுடைய விஷ்ணு மூர்த்தியும் உணரமுடியாமல் நின்ற சிவபிரான் இடத்துமே; தமியேனுனவன் மிகவும் அன்பாயிருக்கின்றதோர் தன்மை நிறைந்த வரத்தைத் தேவரீர் தந் தருள்வீராக; இந்த அன்பே பெறற்கரிய இன்பமாதலால்; ஆவலுடன் அவ் வரத்தையே எப்பொழுதும் விரும்புவேன் என்றார் அகத்திய முனிவர். 52

இன்னே தமியேன் எனவே இனிநின், முன்னே நுதலின் முறையால் இருகை
கொன்னே கொடுதாக் குநர்தங் குறைதீர்த், தன்னே யெனவந் தருள்செய் யெனவே.

இப்பொழுது தமியேன் இங்கு செய்ததைப்போன்று; இனிமேலும் நினது திருமுன்பாகத் தமது நெற்றியில் முறைப்படி இரண்டு கையாலும் விரைவுடன் குட்டி வணங்குவார் தங்கள் குறைகளைத் தீர்த்து; அவர்களின் தாய்போல் பரிந்து வந்து அருள் செய்வீராக என்று; 53

முத்தன் டமிழ்தேர் முனிச தறைய, அத்தன் குமரன் அவைநல் கினமால்
இத்தன் மையவே அலநின் னுழம்நீ, சித்தந் தனில்வேண் டியசெப் பெனவே.

இயல், இசை, நாடகம் எனும் மூவகையான தண்ணளி மிக்க தமிழினைத் தேர்ந்துகொண்ட அகத்திய முனிவன் இதனைச் சொல்லியருள; சிவபிரான் திருக் குமாரர், அகத்தியனே! அவைகளைக் கொடுத்தருளினோம்; இத்தன்மையான வரமே அல்லாது; இன்னமும் நீ உனது சித்தத்திலே விரும்பியவைதயும் சொல்லு வாயாக என எம்பிரான் கூறியருளலும்; 54

கொள்ளப் படுகுண் டிகையிற் குடிஞை, வெள்ளப் பெருநீர் மிசையுற் றடிகள்
தள்ளக் கவிழ்வுற் றதுதா ரணிமேல், எள்ளிற் சிறிதும் இலதென் றிடவே

வெள்ளமாகப் பெருகும் காவிரியாறு கொள்ளப்பெற்று நிறைந்திருந்த எனது கமண்டலத்தினூடு; தேவரீர் காகமாக இருந்து கமண்டலத்தைத் தள்ளிக் கவிழ்ப்ப; அந்த ஆறு கவிழ்ந்து பூமிமேல் போயது; இப்போது கமண்டலத்தில் கொஞ்சமேனும் நீர் இல்லையே என்றும்; 55

ஊனாய் உயிராய் உலகாய் உறைவோன், மேனாள் அருள்செய் வியன்மா நதிதான்
போனால துபோற் புனலொன் றுளதோ, நானா டிடவே நலமா னதுவே.

ஐயனே! ஊனாகி, உயிராகி, உலகாகி உறைகின்ற ஏகனாகிய சிவபிரான் முன்னாள் எனக்குத தந்தருளிய மேலான காவிரியாறு; தானாக பூமிமேல் ஓடிப் போய்விட்டால் அந்த ஆற்றைப்போல் புனிதமான நீர் வேறு ஒன்று நான் நீராடும்படி நலமுடையதாக இருக்கின்றதோ இல்லை. 56

அந்நீர் மையினல் அடியேற் கிவண்நீ, நன்னீர் நவையற் றதுநல் கெனவே
கைந்நீர் மையினற் கடுகின் துணையாம், மூநீர் அயிலும் முனிவன் மொழிய.

அத்தன்மையால் அடியேனுக்குத் தேவரீர் இவ்விடத்துப் புனிதமான நல்ல நீர் குறைவிலாததாய் எக்காலமும் விளங்கும்படி தந்தருள்க என, தனது கையி னாலே சமுத்திரங்கள் அனைத்தையும் கடுகளவாக்கி உண்ட அகத்திய முனிவர் சொல்லியருளலும், 57

காகத் தியல்கொண் டுகவிழ்த் திடமுன், போகுற் றபுதுப் புனலாற் றிடையே
மாகைத் தலநீட் டினன்வா னுலவும், மேகத் திறைமால் கடல்வீழ்ந் தெனவே.

அதுவேளை எம்பிரான் காகத்தின் வடிவாகிக்கொண்டு முன்பு கவிழ்த்திட முன்னே ஓடிப்போகின்ற புதுப்புனலான காவிரியாற்றிடையே; தமது பெரிய திருக்கரத்தை நீட்டியருளினர். அதுதான் வானத்தில் உலவுகின்ற தலையான பெரிய மேகமொன்று பெரிய கடலிடத்து நீர் பருகும்படி வந்து படிந்தது போன்றிருந்தது. 58

அள்ளிச் சிறிதே புனலம் முனிவன், கொள்ளப் படுகுண் டிகையுய்த் திடலும்
உள்ளத் தைநிரப்பி யொழிந் ததெல்லாம், வெள்ளத் தொடுபார் மிசைமே வியதே.

தமது திருக்கையால் காவிரி ஆற்றின் நீரை அள்ளிச், சிறிதே அந்நீரை அகத்திய முனிவனுடைய; நீரை ஏற்று நிறைவுடன் விளங்கும் கமண்டலத்தினூடு விடுத்தலும், அந்நீர் கமண்டலத்தின் உட்பாகமெல்லாம் நிரப்பி, மிச்சமெல்லாம் காவிரியாற்றின் வெள்ளத்தோடு வழிந்தோடிப் பாய்ந்தது.

காவிரியாறு முன்னர் நிரம்பி இருந்த கமண்டலம்; அது எவ்வளவு நீரை விடுத்தாலும் ஏற்கும் இயல்புடையது. அதனுள் முன்னிருந்த நீரில் ஒரு பகுதியாலேயே நிரம்பச் செய்த அற்புதம் விளங்குகின்றது. 59

முன்னுற் றதுபோல் முனிகுண் டிகைநீர், துன்னுற் றதுமேல் தொலையா வகையால்
என்னிற் புதுமை யெனநோக் கினனல், தன்னுற் றமனத் தவமா முனியே.

முன்னின்ற தன்மைபோல அகத்திய முனிவனுடைய கமண்டலம் நிறையப் பெற்றது இனிமேலாக அந்நீர் எக்காலமும் தொலையாதுபோகும் வகையால். இது என்ன புதுமை என அகத்திய முனிவன் அதை ஆச்சரியத்துடன் பார்த்தான் யாளெனில் தன்னை அறிந்து நாடுகின்ற மனத்தினை உடைய அகத்தியன் என்னும் பெயரினை உடைய தவமுனிவன். 60

பேருற் றிடுமிப் பெருநீர் அதனில், வாரிச் சிறிதே வருகுண் டிகையில்
பாரித் தனன்இப் படிமுற் றுறுவான், ஆரிப் படிவல் லவரா யினுமே.

பேர்ந்து ஓடுகின்ற இந்தப் பெரிய ஆற்றுநீரில் எம்பிரான் இப்படியாகச் சிறிது நீரை அள்ளி, பெரிய கமண்டலம் நிரம்பித் தாங்கும்படி நிரப்பி வைத்தார். எந்தப் பெரிய அற்புதமான காரியத்தைச் சாதிக்கக்கூடியவராக இருந்தாலும் கூட, ஆர்தான் இப்படி நிரப்பமுடியாத கமண்டலத்தை நிரம்பும்படி செய்ய வல்லவர். 61

அந்தத் திருமால் அயனே முதலோர், வந்தித் திடவே வரமீந் தருளி
முந்துற் றிடுமூ லமொழிப் பொருளாம், எந்தைக் கரிதோ இதுபோல் வதுவே.

அந்த விஷ்ணுபிரான், பிரமன் முதலோர்கள் வந்தனை செய்திட, அவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்தருளிய வண்ணம், எவற்றிற்கும் முதலெழுத்தாகி இருக்கும் மூலமொழியான ஓங்காரப் பொருளாகிய எந்தை பெருமானுக்கு அரிதோ இதுபோன்ற அற்புதச்செயல். 62

என்றே நினையா இபமா முகவற், சென்றே பணியாச் சிறியேன் குறையா
தொன்றே துமிலேன் உதவுற் றனை நீ, நன்றே கவிழும் நதிநீ ரையுமே.

என்று அகத்திய முனிவன் கமண்டலம் மீண்டும் நிரம்பிய அற்புதத்தை நினைந்து, யானைமுகமுடைய பெருமானைச் சென்று பணிந்து, ஐயனே! சிறியேன் இனிக் குறைவானது ஒன்று ஏதுமிலேன்; இப்போது முன்னே கொஞ்சமும் இலாது கவிழ்ந்தோடிய காவிரியாற்று நீரையுமே தேவரீர் தந்தருளினீர்.

இக்கருத்தை தரா அருள் ஒன்று இன்றியே தந்தாய் என்று உன் தமரெல்லாம் ஆரா நின்றார். எனும் மணிவாசகருடைய திருவாசகப் பாடலுடன் நினைவு கூரற் பாலது. 63

முந்தே முதல்வா முழுதுன் னருளால், அந்தே யளவும் அளியில் சிறியேன்
உய்ந்தேன் இனியும் முனையுன் னுழிநீ, வந்தே அருள்கூர் மறவேல் எனவே.

எல்லார்க்கும் முந்திய முதல்வனே! முழுவதும் நிறைந்த உனது அருளினால்; அற்பமாயினும் கருணையன்பிலாத சிறியேன் உய்ந்தேன். இனிமேலும் தேவரீரை நினைந்தருளுங்கால் வந்து எமக்கு அருள் சுரப்பாய்; என்னை மறவாதே எனலும். 64

அற்றா கவென அருள்செய் தயலே, சுற்றா வருதொல் படையொ டுமெழாப்
பற்றா னவர்நா டுபரம் பொருள்சேய், மற்றா ரும்வியப் பமறைந் தனனே.

அவ்வண்ணமே ஆகட்டும் என எம்பிரான் அகத்திய முனிவருக்கு அருள் புரிந்து, தமது பக்கராகச் சூழ்ந்து வருகின்ற மிக முதிய பூதகணமான படையுடன் எழுந்து, தம்மீது பற்றுடையார்க்கு அருள்புரியும் பரம்பொருளான சிவபிரான் திருக்குமாரர்; மற்று அங்குள்ளார் எல்லாரும் அற்புதத்துடன் வியந்தருள மறைந்தருளினார்; 65

வேறு

மறைகின்ற எல்லைதனில் குறுமுனிவிம் மிதமாய்மன் னுயிர்கள்
எங்கும், உறைகின்ற தனிமுதல்வன் புதல்வன்தன் கோலத்தை
உணர்ந்து போற்றி, அறைகின்ற காவிரியைக் கண்ணுற்று நகைத்து
வெகுண் டருள்கை நாடி, உறைகின்ற கொங்குதனை ஒருவித்தென்
றிசைநோக்கி யொல்லை சென்றான்.

விநாயகப் பெருமான் மறைகின்ற எல்லைதனில்; அகத்திய முனிவர் விம்மிதம் அடைந்து உயிர்கள்தோறும் உறைகின்ற தனி முதல்வரான சிவபிரான் திருக்குமாரனின் அருட்கோலத்தைத் தியானித்து வணங்கி; இரைந்தோடிச் செல்கின்ற காவிரியைக் கண்ணுற்று; சிரித்து என்னை நீங்கிவிட்டேன் என இரைந்தோடுகின்றாயோ எனக் கோபித்து, ஆனால் இவையாவும் திருவருளின் செயல் என்பதை நாடி உணர்ந்து; தான் இருந்தருளிய கொங்கதேசத்தை விடுத்து நீங்கித் தென்திசைநோக்கி வழிக்கொண்டு விரைவில் வந்தார். 66

காவிரி நீங்கு படலம் முற்றிற்று.

ஆகத் திருவித்தம் – 1333

---

28. திருக்குற்றாலப் படலம்

செற்றாலம் உயிரனைத்தும் உண்டிடவே நிமிர்ந்தெழலுஞ் சிந்தை மேற்கொள், பற்றாலங் கதுநுகர்ந்து நான்முகனே முகலோர்தம் பாவை மார்கள், பொற்றாலி தனையளித்தோன் புகழ்போற்றி முகின் மேனிப் புத்தேள் வைகுங், குற்றாலம் ஆவதொரு வளநகரைக் குறுமுனி வன் குறுகி னானால்.

உலக உயிர்களை எல்லாம் அழித்து உண்டிடும்படி ஆலகாலம் என்னும் நஞ்சு, பாற்கடல் கடைந்த காலத்தில் நிமிர்ந்து எழலும்; எமது சிவபிரான் உயிர்கள் மீது கொண்ட பற்றினால்; அந்தக் கொடிய ஆலகாலம் என்னும் நஞ்சை உண்டு; நான்முகமுடைய பிரமதேவர் முதற்கடவுளரின் மனைவிமார் களின் மாங்கல்யமான பொன் தாலியைக் காப்பாற்றி; உலகை உய்யவைத்த பெருமானின் புகழ் அனைத்தையும் எடுத்துப் புகழ்ந்து போற்றுதல் புரிந்து கொண்டு; அகத்திய முனிவர் முகில் போலும் திருமேனி உடைய நாராயணக் கடவுள் கோயில் கொண்டிருக்கும் திருக்குற்றாலம் என்னும்; ஒரு வளங்கொண்ட நகரை, குறுகிய வடிவுடைய அகத்திய முனிவர் அடைந்துகொண்டார். 1

அப்பதியில் அச்சுதனுக் காலயமொன் றுளதம்மா அவனி மீதில், ஒப்பிலதோர் திருமுற்றம் அஃதென்பர் இம்பரெலாம் உம்பர் தாமுஞ், செப்புவரா யிடைதன்னில் அந்தணர்கள் அளப்பில்லோர் செறிவர் அன்னார், மெய்ப்படுநூல் முறைகண்டு மோகத்தால் தமதுமத மேற் கொணடுள்ளார்.

அந்தக் குற்றாலத்தில் நாராயணக் கடவுளுக்கு ஓர் ஆலயம் உண்டு; அம் மாடி, அதை இப்பூமியில் வேறு ஒப்பு இல்லாத திருமுற்றம் என்னும் பெருங் கோயிலாகச் சொல்வார்கள்; இப்பூமியில் உள்ளார் மட்டுமன்றி வான உலகில் உள்ள தேவர்களும் சொல்வார்கள்; அந்த இடத்தில் பிராமணர்கள் அளவு கடந்தோர் இருப்பார்கள்; அந்தப் பிராமணர்கள் உண்மையை விளக்குகின்ற வேதங்களை நன்கு முறையாகக் கற்றுக்கொண்டும்; மோகத்தினால் ஆசைவலை யிற் சிக்கித் தமது மதம் எனப் பெயரிட்ட வைணவம் என்பதை மேற்கொண் டுள்ளார்கள்.

சிவன் ஒருத்தனே தெய்வம் என்று வேதங்கள் உண்மையை அறுதியிட்டுக் கூறிட; அதைக் கற்றாலும் தாங்கள் பிறிதொன்றைக் கண்டு நின்றேம் எனும் பற்றால் தமது மத மேற்கொண்டு நின்றார்கள் என்றார். 2

அன்னவர்கள் எப்பெருமான் தன்னடியார் தமைக்காணின் அழன்று பொங்கி, முன்னுறுதொல் பகைஞரென மிகஇகழ்ந்து மற்ற வர்தம் முகநோக் காராய்த், துன்னெறியே மேற்கொண்டு மறைபயில் வோர் என்பதொரு சொல்லே தாங்கித், தந்நெறியும் புரியாதங் கிருந் தனரால் அஃதுணர்ந்தான் தமிழ்நர் கோமான்.

அவ்வாறாகிய அப்பிராமணர்கள் எம்பெருமானுடைய அடியார்களைக் காணில்; கோபித்து பொங்கி அழன்று நெடுங்காலமாகப் பகைகொண்டவ ரெனும்படி மிக இகழ்ந்து; அடியவர்களுடைய முகத்தையும் திரும்பிப் பார்க்காத வர்களாய்; தீங்காகிய நெறியை மேற்கொண்டு; வேதம் பயில்வோர் நாங்கள் என்கின்ற சொல் ஒன்றுமே பெற்றுக்கொண்டு; அந்த வேத நெறிப்படி ஒழுகாதவராய் அங்கு அப்பிராமணர்கள் இருந்தார்கள்; அதனை அறிந்துகொண் டான் தமிழர்கள் அரசனென அகத்திய முனிவன். 3

குறுமுனிவன் ஆங்கவர்தஞ் செயலுணர்ந்து குற்றால மென்னும் மூதூர், மறுகினிடை யேநடந்து மாயவன்தன் ஆலயமுன் வருத லோடும், நெறிவருமவ் வாலயத்திற் செறிகின்ற வைணவர்கள் நெடிது நோக்கிச், செறுநர்தமைக் கண்டுபதை பதைப்பார்போல் வெய்துயிர்த் துச் செயிர்த்துச் சொல்வார்.

அகத்திய முனிவர் அங்கு அப்பிராமணர்களின் செயலை உணர்ந்து; குற்றா லம் என்னும் பெயருடைய முதிய ஊரின் வீதியூடாக நடந்து சென்று; நாரா யணக் கடவுள் ஆலய முன்பாக வருதலோடும்; நெறிவிளங்கும் அந்த ஆலயத் தில் வாழ்கின்ற வைணவர்களான இப்பிராமணர் நெடுகிலும் கூர்ந்து அகத்திய முனிவனைக் கவனித்து; பகைவரைக் கண்ணுற்றபோது கோப வேகத்தால் பதை பதைப்பார்போன்று; பெருமூச்செறிந்து கோபத்துடன் சொல்வார்கள். 4

ஒல்லாத கண்டிகையும் நீறும்அணிந் தனையதனுல் உலகில் தேவர், எல்லாரும் அறியவைய மேற்றேனுக் கடியவன்நீ ஈண்டு செல்லச், செல்லாது கைத்தலத்தில் ஒருகோலுங் கொண்டனையாற் சிறியை போலும், நில்லாயெம் பெருமான்றன் மாநகரம் அணுகாது நீங்கு கென்றார்.

பொருத்தமில்லாத உருத்திராக்கத்தையும், திருநீற்றையும் நீ அணிந்துள் ளாய்; ஆதலால் உலகில் உள்ள தேவர்கள் எல்லாரும் அறியப் பிச்சை ஏற்கின்ற சிவனுக்கு நீ அடியவன்; நீ இவ்விடத்துச் செல்ல செல்லுபடியாகாது; உனது கையி னிடத்தாக ஒரு தண்டும் கொண்டனை; ஆதலால் நீ அற்பத்தனமுடைய சிறிய வன்போலும்; இங்கு நில்லாதே; எம்பெருமான் நாராயணக் கடவுளின் பெரிய நகரத்தை நீ அணுகாது இங்கிருந்து நீங்கிவிடு என்றார்கள். 5

என்றிடலும் வெகுளாது நகைசெய்து மறைநெறியை யிகந்து நின்றீர், துன்றியிவண் உறைகின்ற துணரேன்இத் திறமெவருஞ் சொன்னார் இல்லை, நன்றுநெறி யென்றுவந்தேன் னும்பான்மை உணர் வேனேல், நான்இம் மூதூர், சென்றிடவும் நினையேனுல் முனியற்க யான்மீண்டு செல்வே னென்றான்.

என்று அப்பிராமணர்கள் கூறுதலும்; அகத்திய முனிவர் அவர் வார்த் தைக்குக் கோபிக்காது சிரித்து; ஓகோ நீங்கள் வேத நெறிகளையும் கடந்து மேலாகி நின்றீர்; நீங்கள் நெருங்கி இங்கே இருக்கின்றீர் என்பது யான் உண ரேனல்; இவ்வண்ணம் நீங்கள் இருக்கின்றீர் என்றும்; அங்கு என்போன்றோர்

போகக்கூடாது என்று எவரும் சொன்னாரில்லை; நல்ல மார்க்கம் இது என்று நான் இவ்வழியால் வந்தேன்; நுமது பான்மையினை உணரமாட்டேன்; நான் இந்த முதிய ஊரில் இனிமேலாக வருவதற்கு நினைய மாட்டேன்; என்னைக் கோபிக்க வேண்டாம்; நான் மீண்டும் திரும்பிச் செல்வேன் என்றான் அகத்திய முனிவன். 6

பொதியமலை தனிலேகும் முனிவன்இது புகன்றிடலும் பொருநீயிப், பதியதனில் வருவதுவும் பாவமாம் ஈண்டுநீ படர்தியென்ன, இதுசரதம் மொழிந்தீர்கள் தொல்லோர்தம் நூன்முறையும் ஈதேயென்னா, விதியருளுந் தக்கனார் வழிமுறையோர் தமைநீங்கி மீண்டு செல்வான்.

பொதிய மலையில் தங்கி இருப்பதற்காக வேண்டி இவ்வழியால் வந்த அகத்திய முனிவர் இது சொல்லலும்; அதனையும் கேட்கப் பொறுத அப்பிராமணர்கள்; நீ இந்த ஊரில் வருவதே பெரும் பாவமாகும்; இப்படியே வந்த வழியே போய்விடு எனலும்; ஓகோ நீங்கள் இதில் உண்மையே சொன்னீர்கள்; உங்களுடைய முன்னையோரால் எழுதப்பட்ட நூல்முறையும் இதுதானே என்று கூறிவிட்டு; பிரமதேவர் பெற்ற தக்கன் என்பானின் கொள்கையை வழிமுறை வழிமுறையாகக் கடைப்பிடித்து வாழ்கின்ற அப்பிராமணர்களை விட்டு நீங்கிச் சென்றார் அகத்திய முனிவர். 7

சிட்டர்புகழ் கயிலைமலை காத்தருளுந் திருநந்தி தேவன் செங்கேழ், மட்டுறுபங் கயத்துறையும் நான்முகத்தோன் துருவாசன் மறைநூல் யாவுந், தட்டறவே உணர்பிருகு கவுதமன்கண் ணுவமுனிவன் ததீசிஇன்னோர், இட்ட பெருஞ் சாபமெலாம் பொய்த்திடுமோ எனவுன்னி ஏக லுற்றான்.

மேலான நெறி நின்ற பெரியோர்கள் புகழும் கைலைமலையைக் காவல் புரிந்தருளும் திருநந்திதேவர்; சிவந்த நிறம்கொண்டு விளங்கும் தேன் துளிக்கும் தாமரை மேவிருக்கும் பிரமதேவர்; துருவாச முனிவர்; வேதநூல்கள் யாவையும் தடுமாற்றம் இலாது கற்றுணர்ந்த பிருகு முனிவன்; கௌதம முனிவன்; கண்ணுவ முனிவர்; ததீசி முனிவர் ஆகிய இவர்கள் இப்பிராமணர்களுக்கு இட்ட பெருஞ்சாபங்கள் எல்லாம் பொய்த்திடுமோ என நினைந்துகொண்டு மீண்டு செல்வாராயினார் அகத்திய முனிவர். 8

நந்திதேவர் சாபமிட்டது: தக்கன் சிவபிரானை நீக்கி செய்த யாகத்திலே கொடுக்கப்படும் தானத்தையும், பொருளையும், உணவையும் பெரிதும் விரும்பி வேதங்களை உணர்ந்த பிராமணர்கள் அங்கு இருத்தலால் நந்திதேர் அவர்களை நோக்கி, நீங்கள் சிவநிந்தனை செய்வான் பாலாக இருந்தமையால் நீங்கள் உண்மை உணராது பலகாலும் உழல்வீர்கள் எனச் சாபமிட்டார்;

துருவாச முனிவர் சாபமிட்டது: பூசக்கரம் என்னும் நகரத்தில் புண்டரீகனென்னும் பெயருடைய ஒரு பிராமணன் பல சீடர்களுக்குப் போதித்துவந்தான். அவனுக்கு அழகிய உருவுடைய ஒரு மனைவி இருந்தாள்; அவள் வியபிசாரஞ் செய்து, கணவனின் சீடரைப் புணர்ந்து வருங்கால், துருவாச முனிவர் அவ்விடம் வருதலும், அவரையும் தனது கெட்ட எண்ணத்திற்கு இழுக்க, அந்நிலை கண்டு துருவாசர் அப்பிராமணனை நோக்கி, துர்நடத்தை உடைய இவளை நீக்காது விடுத்தமையால் உனது குலமே உண்மை உணரமுடியாது தவித்து சிற்றின்பமான உலக இன்பமே பெரிதென மதிப்பவராகட்டும் எனச் சபித்தார்.

பிருகு முனிவர் சாபமிட்டது: பிருகு முனிவர் மனைவி கியாதி அசுரர்களுக்கு இடங்கொடுத்தமையால், அவளைத் திருமால் கொன்றார். இதை உணர்ந்த பிருகு முனிவர் திருமாலின் அடியவரான பிராமணர்கள் ஒழுக்கங் குன்றி சிவநிந்தை செய்வார்கள் எனவுஞ் சாபமிட்டார்.

மற்றை பிரமன் ததீசி முனிவர் வரலாறு தக்க காண்டத்தில் கூறப்படும்.

ஏகலுறு குறுமுனிவன் உயிர்க்குயிராய் நின்றானை இகழ்வார் தங்கண், மோகமுறும் அகந்தையினை முதலோடுங் களைவனென முன்னி முன்னாட், போகியதன் மாயையினால் இரதத்தின் ஆவிபடு பொன்னே போலப், பாகவத மாகுவதோர் உருக்கொண்டான் கருணையிற் பரவை போல்வான்.

செல்லுகின்ற அகத்திய முனிவன், உயிர்க்குயிராய் நின்றானாகிய சிவ பிரானை இகழுகின்ற இப்பிராமணர் தங்களது மோகம் உற்ற அகந்தையை வேரோடும் களைவேன் என்று நினைந்து: முன்னாள் தனக்குத் தெரிந்துகொண்ட மாயையினால்; இரசத்தின் ஆவிபட்டு சிவப்பாக மூடப்பட்ட பொன்னேபோன்று; பாகவதர் என்னும்படியான உருவத்தை எடுத்துக்கொண்டார் அகத்திய முனிவர்; அவர் கருணையினால் சமுத்திரம் போல்பவர். 9

ஆளுடைய நாயகன்பால் அன்புடையான் மாயவன்றன் அடியனேபோல், கோளுடைய மாயத்தான் மேனிகொண்டு மீண்டுமங்கட் குறுக லோடும், நீளிடையில் வரக்கண்ட வயிணவர்கள் எதிர்சென்று நெடிது போற்றித், தாளிடையில் வீழ்ந்திடலும் நாரணனுக் காகவெனச் சாற்றி நின்றான்.

எல்லாரையும் ஆளுடைய நாயகரான சிவபிரான்பால் அன்புடைய அகத்திய முனிவர் நாராயணக் கடவுளின் அடியனேபோல்; குறிகள்கொண்ட மாயமான மேனியைக் கொண்டு; மீண்டும் அகத்திய முனிவன் அங்கு போதலோடும்; நீண்ட வீதிகளூடாகப் பாகவத வடிவத்துடன் வரக் கண்டுகொண்ட வைணவப் பிராமணர்கள்; பாகவதராகிய அகத்திய முனிவனை எதிர் சென்று வரவேற்று நெடிது நேரம் போற்றி செய்து; பாதங்களில் அவர்கள் வீழ்ந்து வணங்குதலும்; அகத்திய முனிவர் அந்த வணக்கத்தை நாராயணனுக்காகட்டும் எனக் கூறி நின்றார். 10

அடிமுறையின் வணங்கியெழும் வேதியர்தங் களைநோக்கி அரிபால் அன்பு, முடிவிலனும் பாலென்று மொழிந்தனர்அங் கதுகாண முன்னி வந்தாம், படியதனில் உமக்குநிகர் யாருமிலை நுமைகண்ட பரிசால் யாமுந், தொடர்வரிய பேருணர்வு பெற்றெனமென் றேபின்னுஞ் சொல்லல் உற்றான்.

தமது பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுகின்ற பிராமணர்களை நோக்கி, நாரணன்பால் உங்களுடைய அன்பினுக்கு முடிவில்லை என்று பலர் சொன்னார்கள்; அதை நேரில் காணும்படி நினைந்து வந்தோம்; இப்பூமியிலே உமக்கு நிகராவார் யாருமில்லை; உம்மைக் கண்ட பரிசால் எமக்கும் எந்நாளும் நினையாத பேருணர்வைப் பெற்றுக்கொண்டோம் என்று கூறி; பின்னரும் சொல்லலுற்றான் அகத்திய முனிவன். 11

முத்திதரு பேரழகர் திருமலையி னிடையுற்றோம் முன்னம் இன்னே, அத்திகிரி தனிலிருப்பச் செல்கின்றோம் நம்பெருமான் அமருங் கோயில், இத்தலமேல் உளதென்பர் அதுபரவும் விருப்புடையோம் என்ன அன்னோர், கைத் தலத்தோர் விரற்சுட்டி அது திருமால் இருக்கையெனக் காட்டலுற்றார்.

முத்தியினைத் தருகின்ற பேரழகர் திருமலையிடத்து நாம் இருந்தோம்; இப் பொழுது அத்திமலைதனில் இருக்கும்படி நாம் செல்கின்றோம்; எம்பெருமான் நாராயணன் அமர்கின்ற கோயில் இந்த ஊரினில் உளது என்று சொல்வார்கள்; அத்தலத்தை வணங்கும் விருப்பமுடையோம்; என்று பாகவத வேடங்கொண்ட அகத்திய முனிவர் கூற; அதுகேட்ட வைணவப் பிராமணர்கள் கையிடத்தாக வுள்ள விரலால் தமது கோவிலைச் சுட்டிக்காண்பித்து அதுதான் திருமாலின் இருப்பிடம் எனக் கூறிநின்றார். 12

காட்டுதலுங் கைதொழுது மாலுறையும் மந்திரத்தைக் கடிது நண்ணி, ஈட்டமுடன் வலஞ்செய்து கண்ணபிரான் அடியிணையை இறைஞ்சி யேத்திப், பாட்டிலுறு தொல்லடியார் தமைநோக்கி இவரை வழி படுதற் குள்ளம், வேட்டனமால் மஞ்சனமே முதலியன கொணர் மின்கள் விரைவின் என்றான்.

வைணவப் பிராமணர்கள் அகத்திய முனிவருக்குக் கையால் சுட்டிக் காட்டு தலும்; அகத்தியமுனிவர் கைகூப்பித் தொழுது திருமால் உறையும் கோவிலை விரைவாக அடைந்து; அங்கு நின்ற வைணவப் பிராமணர் கூட்டத்துடன் கோயிலை வலஞ்செய்து; கண்ணபிரானின் திருவடி மலர்களை வணங்கித் துதித்து; தமது பக்கராக நின்ற; முன்னர் பூசை புரிந்த திருமாலின் அடியாரைப் பார்த்து; இப் பெருமானை வழிபட்டுப் பூசை புரிதற்கு யாம் உள்ளம் விரும்பினோம்; அதற் குரிய திருமஞ்சன நீர் முதலிய திரவியங்களை விரைவுடன் கொண்டு வருவீராக எனக் கூறினார். 13

நன்றெனவே சிலரேகித் தூயதிரு மஞ்சனமும் நறுமென் போதும், மன்றலுறு செஞ்சாந்தும் அணித்துகிலும் ஏனையவும் மரபிற் கொண்டு, சென்றுமுனி வரன்முன்னம் உய்த்திடலும் அனையவர்தந் திறத்தை நோக்கி, இன்றிவரை யருச்சனைசெய் விதிமுறையைப் பார்த்திடுங்கள் யாரு மென்றே.

நன்று என்று கூறிவிட்டுச் சிலர் சென்று; தூயதான திருமஞ்சன நீரும் வாசனை பொருந்திய மெல்லிய பூவும்; வாசம் கமழும் சிவந்த சந்தனமும்; அழகிய பட்டாடையும் ஏனைய பூசனைக்குரிய பொருளும் முறைப்படி விரைவுடன் கொண்டு சென்று; அகத்தியமுனிவர் முன்பு சேர்த்தலும்; அங்கு நின்ற வைண வப் பிராமணர்கள் கூட்டத்தை அகத்தியமுனிவர் பார்த்து; யான் இன்று இந்த மூர்த்தியை அருச்சனை செய்கின்ற விதிமுறையை எல்லீரும் நீங்கள் பார்த்திடுங் கள் எனக் கூறி; 14

அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம் பெருமானை அகத்துட் கொண்டு, சிறுகுமுரு வுடையமுனி நாரணனார் திருமுடிமேற் செங்கை யோச்சிக், குறுகுகுறு கெனஇருத்தி ஒள்ளரக்கிற் புனைபாவைக் கோல மீது மறுகுதழல் உற்றெனனக் குழைவித்தோர் சிவலிங்க வடிவஞ் செய்தான்.

அறுகு இளம்பிறை கங்கை அணிந்த செஞ்சடையுடைய எம்பிரானை; சிறிய திருவுருவமைந்த அகத்திய முனிவர் தமது திருவுள்ளத்துத் தியானித்துக்கொண்டு; நாராயணப் பெருமானின் திருவுருவத்தின் மேலாக; தமது சிவந்த கையை வைத்து; குறுகு குறுகுவெனச் சொல்லி அமர்த்தி; மென்மையான மெழுகினாற் செய்யப்பெற்ற பாவையின்மேல்; காயும் நெருப்புப்பட்ட தன்மைபோலக் குழையப்பண்ணி; அந்தத் திருமால் உருவச் சிலையால் ஒரு சிவலிங்க உருவஞ் செய்தார் அகத்திய முனிவர். 15

அல்லிமலர்ப் பங்கயனும் நாரணனும் எந்நாளும் அறியொணாத, எல்லையிலாப் பரம்பொருளைத் தாபித்து மந்திரங்க ளெடுத்துக் கூறித், தொல்லையுருக் கொண்டுமலர் மஞ்சனமே முதலியன தூய ஆக்கி, ஒல்லைதனில் அருச்சிப்பக் காண்டலும்அவ் வந்தணர்கள் உருத்துச் சொல்வார்.

இவ்வாறு செய்துகொண்ட சிவலிங்கமீதில்; அகவிதழ் பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவரும், நாராயணக் கடவுளும்; எந்தநாளும் அறியொணாத எல்லைகாண்பரிய பரம்பொருளான சிவபிரானைப் பிரதிட்டை செய்து; மந்திரங்களை வெளிப்படையாகச் செபித்து; தமது பழைய உருவத்தை இப்பொழுது அகத்திய முனிவர் எடுத்துக்கொண்டு; பூக்கள் திருமஞ்சன நீர் முதலியவற்றைத் தூயதாகும்படி செய்து; மிகு விரைவுடன் எம்பிரானை அகத்திய முனிவர் அர்ச்சிக்கத் தொடங்க; இவற்றை வைணவப் பிராமணர் காண்டலும் உருவந்தாற்போல் கோபங் கொண்டு சொல்வார். 16

காயத்தான் மிகச்சிறியன் முப்புரத்தை நீறுக்குங் கடவுட் காற்ற, நேயத்தான் இவ்விடையே முன்வந்தான் யாமிகழ நில்லாதேகி, ஆயத்தான் பாகவத வடிவாய்வந் திச்சமயம் அழித்தான் அந்தோ, மாயத்தான் பற்றுமினோ கடிதென்று குறுமுனியை வளைந்து கொண்டார்.

பார்த்தால் இவன் வடிவத்தால் மிகவுஞ் சிறியவன்; ஆனால், முப்புரங்களையும் சிரிப்பினால் எரித்து, நீறுக்கும் கடவுள் சிவனுக்கும் மிகவும் நேயமுடையவன்; இவ்விடத்தே இவன் முன்பு ஒருமுறை வந்தான்; யாம் இவனை இகழ்ந்து கூற, நில்லாது திரும்பிச் சென்று; பின்னர் நாங்கள் கண்டால், உபசரிக்கும்படி பாகவத வடிவத்தைக் கொண்டு வந்து; இச்செயலைச் செய்து; இந்த வைணவ சமயத்தை அழித்தான் இவன்; ஐயகோ! இவன் மாயமுடையவன் தப்பிப் போகாதபடி விரைவுடன் பற்றிக்கொள்ளுங்கள்; என்று கூறி எல்லா வைணவப் பிராமணர்களும் அகத்திய முனிவரை வளைந்துகொண்டார்கள். 17

பற்றிடுவான் வளைகின்றோர் தமைநோக்கி எரிவிழித்துப் பரவை தன்பால், உற்றவிடம் விடுத்ததென முனிவன்றன வெகுளித்தீ உய்த்த லோடுஞ், சுற்றியது சுற்றியவர் தமைப்பின்னும் பொறிபடுத் தித் துரந்து செல்ல, மற்றவர்கள் இரிந்தேதம் பதியிழந்து சிதறின ரால் மண்மே லெங்கும்.

பிடிக்கும்படியாக அகத்தியமுனிவரை வளைந்து சுற்றிக்கொள்ளுகின்றோர்களை கண்ணில் அக்கினி தோன்றும்படி உரக்கப் பார்த்து; பாற்கடலானது நஞ்சை அவ்விடத்துக் கக்கியுள்ளது எனும்படி தமது கோப நெருப்பைக் கண் மூலமாகச் செலுத்துதலோடும்; அந்த நெருப்புச் சென்று அப்பிராமணர்களை வளைந்து சுற்றியது; வளைந்து சுற்றிக்கொண்ட நெருப்பு மேலும் சுட்டுச் சுட்டுக் கலைத்துச் செல்ல; அவர்கள் யாவரும் பயந்தோடி அந்த ஊரில் தமது இருப்பிடத்தை விடுத்து நீங்கிப் பூமி எங்குஞ் சிதறிச் சென்றார்கள். 18

அன்னோர்கள் போயிடலும் இன்றுமுதல் சிவன்இடமீ தாயிற் றென்று, முன்னோனை அருச்சித்துப் பணிந்துவிடை கொண்டுதென் பால் முன்னிச் சென்று, பொன்னோடு மணிவரன்றி அருவியிழி தரு பொதியப் பொருப்பில் நண்ணி, மன்னோமெய்த் தவம்புரிந்து வீற்றி ருந்தான் அப்பரமன் மலர்த்தாள் உன்னி.

அந்த வைணவப் பிராமணர்கள் சிதறி ஓடிப்போய்விடலும்; இந்த இடம் இன்று முதல் சிவபெருமான் கோயில் ஆயிற்றது என்று; முன்னைப் பழம்பொருளான சிவபிரானை அகத்தியமுனிவர் அங்கு அருச்சித்து பணிந்து விடை பெற்றுக்கொண்டு, தென்திசையை நோக்கிச் சென்று; பொன்னோடு இரத்தினக் கற்களையும் அருவியாறுகள் திரட்டிக்கொண்டு வழிந்தோடும் சிறப்பினையுடைய பொதிய மலையிற் சென்று சேர்ந்து, தன்னை அங்கு செல்ல வைத்த கருணைக் கடலான சிவபிரானின் திருவடி மலர்களைத் தியானித்துக்கொண்டு மேலான தவத்தினை அங்கு செய்திருந்தார். 19

வேறு

பூவிரி கின்ற காமர் பொதும்பர்சேர் பொதிய வெற்பில்
தாவிரி கும்பத் தண்ணல் வந்திடு தன்மை சொற்றும்
மாவிரி கின்ற சாதி வனத்திடை மலர்ப்பூங் காவில்
காவிரி போந்த வாறும் ஏனவுங் கழறு கின்றும்.

எம்பிரானே பன்னிரு புயவா! இதுகாறும் தேவரீருக்குப் பூக்கள் மலர்ந்து விளங்குகின்ற அழகிய பூஞ்சோலைகள் நிறையப் பெற்ற பொதியமலையில் குற்றம் நீங்கிய கும்பத்திடத்துத் தோன்றிய அகத்திய முனிவர் வந்திட்ட தன்மையைச் சொல்லியருளினோம். இப்பால் திருநிறையப் பெற்ற சீகாழி என்னும் வனத்திடத்தாக இருக்கின்ற இந்திரதேவனுடைய மலர்கள் நிறையும் பூஞ்சோலையிடத்து; வாட்டம் நீங்கக் காவிரியாறு வந்த வரலாற்றையும் பிறவற்றையும் சொல்லியருள்வோம் என வியாழ பகவான் மீண்டும் சொல்லத் தொடங்குவார். 20

திருக்குற்றலப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் 1353.

---

29. இந்திரன் அருச்சனைப் படலம்

கொடியுருக் கொண்டு முன்னங் குண்டிகை இருந்த பிள்ளை
படிமிசை அதனைத் தள்ளப் படர்ந்தகா விரியின் றன்மை
விடலருந் தளையின் நீக்கி வியனெறிப் படுத்த லோடும்
அடிகளின் அருளாற் செல்லும் ஆருயிர் போன்ற தன்றே.

காகத்தின் உருவம் கொண்டு முன்பு அகத்திய முனிவரது கமண்டலத்து இருந்த மூத்த திருக்குமாரரான விநாயகக் கடவுள்; நிலமிசையாக அந்தக் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட; அதனால் வெளிப்பட்டுப் பாய்ந்தோடிய காவிரியாற்றின் தன்மை எப்படியாயிற்றென்றால். நீக்கமுடியாத பந்தங்களில் நின்று நீக்கப்பட்டு; மேலான ஞான ஆசார நெறியின் நிறுத்திய குருபரனின் அருளின்படி வழிப்பட்டு வாழ்கின்ற மேலான ஓர் உயிரின் தன்மையை ஒத்தது.

ஞான குருவின் அருட்பார்வையான தீக்கையால் பக்குவமுள்ள ஓர் உயிர் உலக பந்தங்களை விடுத்து மேலான இன்பநெறியில் நிலைபெறுதல் போன்று அகத்திய முனிவன் கமண்டலத்தே பந்திக்கப்பட்ட காவிரி; விநாயகக் கடவுளால் கமண்டலம் கவிழ்க்கப்படலால் தனது கட்டு நீங்கிப் பூவுலகில் படர்ந்தோடியது.

உலக பந்தங்களில் விடுபட்டனர் ஞானிகள் என்பதை,

தந்தை தாய் மைந்தர் தமர் தாரம் என்று அடியேன்
பந்தத்தில் பட்டு பாழாகிப் போகாமே சிந்தை தெளிவித்து; எனவும்
நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை ....
.... சிவநெறியே சேரும் வண்ணம். எனவும் வரும் பெரியோர்

வாக்கியங்களால் உணர்க, 1

பண்டொரு தந்தி யானேன் படர்சிறைப் புள்ளாய்த் தள்ளக்
குண்டிகை இருந்த நீத்தங் குவலயம் படர்ந்த பான்மை
எண்டருந் தடையால் வல்லோன் இருங்கடத் திட்ட பாந்தள்
மண்டலத் தொருவன் நீப்ப வழிக்கொளல் போன்ற தன்றே.

இன்னமும்; முன்னர் ஒரு யானை வடிவான விநாயகப் பெருமான் படர்கின்ற சிறகுகளை உடைய காகமாகி கமண்டலத்தைத் தள்ள; அந்தக் கமண்டலத்துள் இருந்த காவிரியெனும் தீர்த்தமானது இப்பூமியில் சென்ற தன்மை எப்படியெனில்; யாவரும் பெருமையுடன் நினைக்கும்படி பாம்பினை; ஓடமுடியாது மந்திரத்தினால் தடுத்து ஓரிடத்தில் வைக்கவல்ல ஒரு மந்திரவாதியானவன்; அவ்வாறு பெரிய குடத்துள் இட்டு வைத்திருந்த பாம்பை; இப்பூமியில் ஒருவன் அக்குடத்தினின்றும் நீக்கிவிட; அப்பாம்பு வெளியில் வேகத்துடன் ஓடிச்செல்வது போன்றும் இருந்தது. 2

ஏதத்தின் ஒழுக்கு நீக்கும் இறைவனூல் ஒழுக்குந் தொல்லை
வேதத்தின் ஒழுக்கும் நோற்று வீட்டினை அடையும் நீரார்
போதத்தின் ஒழுக்கும் எங்கோன் புரிதரு கருணை யென்னும்
ஓதத்தின் ஒழுக்கு மென்னக் காவிரி யோடிற் றன்றே.

மனிதனிடத்துக் காணப்படும் துன்மார்க்கத்திற்குரிய குறைபாடுகளை நீக்கி விடுகின்ற சிவாகம நூலில் சொல்லிய ஒழுக்கத்தையும்; முந்திய வேத நூலில் சொல்லிய ஒழுக்கத்தையும்; தவம் செய்து முத்தி இன்பத்தை அடைய இருக்கும் நிலையைப் பொருந்தியவரது ஞான ஆசார ஒழுக்கமும்; எங்கள் பெருமான் எமக்குப் புரிந்தருளுகின்ற கருணை என்னும் சமுத்திரத்தின் பெருக்கத்தையும் போல, காவிரியாறு ஓடியது. 3

தள்ளரும் பரவை ஏழுந் தரணியைச் சூழ்ந்து நின்ற
உள்ளுறு தொடர்பு நாடி யாவையும் ஒருங்கு நண்ணிப்
பொன்ளெனப் புகுந்த தென்னப் புவியெலாம் பரவி ஆர்த்துத்
தெள்ளிதிற் கலங்கி நீத்தந் தெளிகிலா தொழுகிற் றுமால்.

நீக்குதற்கரிய ஏழு சமுத்திரங்களும் பூமியைச் சூழ்ந்து வெவ்வேறாக நிற்கின்றமையால் பூமியிடத்து நமக்குத் தொடர்பு உண்டு என்பதை உணர்ந்து எல்லாச் சமுத்திரங்களும் திரண்டு வந்து ஒருங்கே விரைவில் இவ்விடத்தில் புகுந்தது என்னும்படியாகப் பூமி எல்லாம் காவிரியாறு பெருகிப் பரந்து இரைந்து, விரைவில் கலங்கி அந்நீரானது தெளிகிலாது ஓடிக்கொண்டிருந்தது. 4

தெண்டிரைப் புணரி யெல்லாந் தினைத்துணை யாக வாரி
உண்டருள் முனிவன் தீர்த்தம் ஒன்றினை வேண்டு மெல்லை
அண்டர்தம் பெருமான் நல்க அன்னவன் கரத்தி லேந்துங்
குண்டிகைப் புனற்கு நேராக் கூறுதற் குவமை உண்டோ.

தெள்ளிய திரைகளையுடைய சமுத்திரங்கள் யாவும் தினையளவாகும்படி வாரி வாயில் இட்டு உண்ட அகத்திய முனிவன் தனக்கு ஒரு தீர்த்தம் வேண்டு மென்று எம்பிரானைக் கேட்டருளிய நேரத்தில் தேவாதிதேவர்க்கெல்லாம் பெருமான், சிவன் கொடுத்தருள; அந்த அகத்திய முனிவன் கையில் ஏந்துகின்ற கமண்டலத்தில் கொள்ளப்பெற்ற காவிரி நீருக்கு நேராகக் கூறுவதற்கு ஓர் உவமையும் உண்டோ இல்லை என்பதாம் ஏழு கடல்களையும் உண்ட அகத்திய முனிவன் நீர் வேண்டுமென, சிவபிரான் காவிரியைக் கொடுப்ப, தனது கமண்டலத்து ஏற்றுக்கொள்ளப்பெற்றதால் அக்காவிரி எத்துணைப் பெருமையும் வலிமையும் உடையதாக இருக்கும்; உலகில் ஏழு கடல்களையும் உண்டவன் பெற்றது இது ஆகவே, இதற்கு வேறு உவமை இல்லை; சொல்லமுடியாது என்றார். 5

தொல்லையிற் குறியோன் வந்தான் துய்க்குமோ இன்னு மென்னு
வல்லையில் தழைகள் பற்றி வாரிதி கூவிப் பாரின்
எல்லையிற் படர்ந்த தென்ன இலைசெறி பொதும்பர் ஈட்டம்
ஒல்லையிற் பரித்து மேல்கொண் டோடிய தொலிகொள் நீத்தம்.

முன்னர் தன்னை கமண்டலத்துள் அடக்கிய அகத்திய முனிவன் திரும்பவும் வருகிறான். ஆகவே, இன்னமும் என்னை கமண்டலத்தூடு அடக்கிக்கொள்வானோ என்று விரைவுடன் தழைகளைப் பற்றிக்கொண்டும் சமுத்திரதை துணைக்குக் கூவி அழைத்துக்கொண்டும் விரைவுடன் காவிரியாறு ஓடிச்செல்கிறதோ என்பதுபோல இலைகள் செறிந்த சோலைகளை எல்லாம் விரைவுடன் வேரோடு சாய்த்து நீர்மேல் தாங்கிக்கொண்டு ஓடிச்சென்றது ஒலிபெருக்குகின்ற காவிரியாறு. 6

சந்தமும் அகிலுஞ் சங்குந் தரளமுங் கவரி தானுஞ்
சிந்துரத் தெயிறும் பொன்னும் மணிகளுந் திரைமேற் கொண்டு
வந்திழி நதியின் தன்மை வருணன்இப் பொருள்க ளெல்லாம்
இந்திரன் தன்பால் ஓச்ச ஏகுதல் போன்ற மாதோ.

சந்தனமும், அகிலும், சங்கும் முத்தும், சாமரை தன்னையும், யானைக் கொம்பும், பொன்னும், இரத்தினங்களும், திரைமேல் சுமந்து கொண்டு, ஓடி வருகின்ற தன்மை எப்படிப்போலும் எனில், வருணதேவன் சொல்லப்பட்ட இப் பொருள்கள் எல்லாவற்றையும் சீகாழி வனத்தில் இருக்கும் இந்திரன்பால் செலுத்தவேண்டி அவை யாவும் ஆற்று நீரில் மேலாகச் செல்லுகின்றன எனும் படியாயது. 7

வரையெனுந் தடம்பொற் றேரும் மதகரித் தொகையும் மாந்தர்
நிரைகளுந் தரங்க மாவும் நெறிக்கொடு மகவான் தன்பால்
விரைவொடு சேறல் சூரன் விண்ணவர்க் கரசன் மீது
பொரவிடு தானை வெள்ளம் போவன போன்ற தன்றே.

மலைகள் எனும் விசாலித்த பொன்னான தேரும்; மதம்பொழியும் யானைகளின் தொகையும்; மனிதர் என்கின்ற காலாட்படையும்; குதிரைகள் என்னும் விலங்குகளும்; ஆகிய இவைகள் ஆற்று நீரால் வாரப்பட்டு இந்திரன்பால் சீகாழிக்கு முறையே விரைவுடன் போகும் தன்மை சூரபன்மனானவன் இந்திரன்பால் போர் செய்யவிடுத்த தேர்ப்படை, யானைப்படை, காலாட்படை, குதிரைப்படை, என்னும் நான்குவகைச் சேனையின் வெள்ளங்கள் போவதுபோன்று இருந்தது. 8

ஆவதோர் இனைய வாற்றால் அலையினால் அகல்வான் முட்டிக்
காவதம் பலவாய் ஆன்று காசினி அளந்து கீழ்பாற்
போவதோர் பொன்னி நீத்தம் புரந்தரன் இருந்து நோற்குந்
தாவறு வனத்திற் போதார் தண்டலை புகுந்த தன்றே.

இவ்வாறு கூறப்பட்ட இந்த இயல்புகள் அமையக் காவிரியாறு தனது திரைகளினால்; அகன்ற வானம் முட்டும்படி ஓங்கிப் பெருகி; பலகாதவ தூரம் வரை அகன்று பெருகுதலால் இப்பூமியின் பரப்பை அளவிடுதல் போன்று; கிழக்குத் திக்கை நோக்கிச் சென்று கொள்வதாய்; தேவேந்திரன் இருந்து தவம் செய்கின்ற குறைவு நீங்கிய சீகாழி வனத்திலுள்ள பூக்கள் நிறைந்த பூஞ்சோலையைப் புகுந்ததன்றே 9

ஓடுநீர் நீத்தப் பொன்னி யொல்லையிற் காமர் காவில்
பீடுற வருத லோடும் பேதுறு மகவான் காணா
ஆடினான் நகைத்தான் எங்கோன் அருச்சனை முடிந்த தென்று
பாடினான் முதல்வன் றாளைப் பரவினான் படர்ச்சி தீர்ந்தான்.

பாய்கின்ற நீர் வெள்ளத்தையுடைய காவிரியாறு; விரைவில் அழகிய பூஞ்சோலையில் பெருமையுடன் வருதலோடும்; இதுகாலவரையில் மனம் பேதுற்று நின்ற இந்திரன் அருளினால் வரும் காவிரீயின் வரவைக் கண்டு; எழுந்து, துள்ளி ஆடினான்; சிரித்தான்; எமது பெருமானுடைய அருச்சனை முடிந்தது என்று பாடினான்; முதல்வராகிய விநாயகப்பெருமானைத் துதித்தான்; தனது கவலை யாவும் நீங்கினான். 10

சீரினை யகற்றி நீங்காத் திருவினை மாற்றித் தொல்பேர்
ஊரினைக் கவர்ந்து தன்னோர் உயிருக்கும் இறுதி நாடுஞ்
சூரனை வென்றால் என்னத் தொலைவிலா மதர்ப்பு மிக்கான்
ஆரவன் உளத்திற் கொண்ட உவகையை அறைதற் பாலார்.

தனது சிறப்பை நீக்கி; எக்காலத்தும் நீங்காத தனது செல்வத்தை அழித்து; தனது தொன்றுதொட்டுச் சிறப்புடன் இருந்த ஊரினைக் கைப்பற்றி; தனது உயிருக்குக் கூட முடிவினைச் செய்யும்படி நினைந்துகொண்டிருக்குஞ் சூரபன்மனை வென்றுகொண்டான் எனும்படியான; அழிவிலாத ஆனந்தம் கொண்டான்; ஆர் தான் அந்த இந்திரன் உள்ளத்தில் கொண்ட மகிழ்ச்சியைப் பற்றி எடுத்துக் கூறமுடியும்; 11

பாடுறு பொன்னி நீத்தம் பாய்தலும் மகவா னேபோல்
வாடுறு கின்ற தண்கா வல்லையிற் கிளர்ச்சி யெய்தி
ஆடுறு பசிநோ யுற்றோர் அரும்பெறல் அமிர்தம் வந்து
கூடுற நுகர்ந்தால் என்னக் குளிர்ப்பொடு தளிர்த்த தன்றே.

பெருமை உற்றதான காவிரியாற்று நீர் பாய்தலும்; இந்திரனைப்போல் வாடுகின்ற குளிர் தரும் பூஞ்சோலையானது மிக விரைவுடன் செழிப்புற்று; வருத்துகின்ற பசி நோய் அடைந்தார்கள் பெறுதற்கரிய தேவாமிர்தம் உண்ணும் படி வலிய வந்து கைகூட; அதனை உண்டுகொண்டார்போல் குளிர்ச்சியோடு பூஞ்சோலை தளிர்த்தது. 12

வானிறை கின்ற கொண்மூ வார்துளி தலைஇய பின்றைக்
கானிறை மரனும் பூடும் வல்லியுங் கவின்று லென்ன
மேனிறை அடைகள் மல்கி விரிதரு சினையும் போதுந்
தானிறை கின்ற தம்மா சதமகன் வளர்த்த பூங்கா.

வானத்தில் நிறைகின்ற மழை பெய்யும் மேகங்களில் எழுகின்ற நீண்ட துளிகள் கோடைகாலத்தின் பின் முதற் பெய்தலாகி; பெய்த நேரத்து காட்டில் நிறைந்திருக்கும் மரங்களும்; பூடுகளும்; கொடிகளும் தளிர்த்து பூத்தால் ஒப்ப; இந்திரன் வளர்த்த பூஞ்சோலையும் வாடிய மரங்கள் நீர் பெறுதலாலே அழகிய குருத்துக்களை விடுத்து இலைகளுடன் தளிர்த்து; பின்னர் பரந்து விரிந்து காணப்பெறும் மொட்டுக்களும் பூவுமாக நிறைகின்றது; 13